Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

**தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்**

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310
(ச-1771)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 12 (07.11.2003) வெள்ளிக்கிழமை இதழ் :38

## விடுமுறையில் சென்ற புலி உறுப்பினர் திருமலையில் சடலமாக மீட்கப்பட்டார்!

(திருகோணமலை)

விடுமுறையில் வீட்டுக்குச்சென்ற விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை விடுமுறையில் தனது சொந்த இடமான திருகோணமலையில் உறவினரைச் சந்திக்கச் சென்ற மேஜர் நந்தன் என்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரே நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை பொலிசாரிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்து திருகோணமலை பதில் நீதிவான் எஸ்.சுபாசினி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவரது மரண விசாரணை அறிக்கையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அம்மாவின்ர ஆட்டம் உச்சக் கட்டத்துக்கு போகுது பாருங்கோ...

## அரசாங்க ஊடகங்களை சந்திரிகா பொறுப்பேற்பு!

(கொழும்பு)

அரசாங்கத் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகளை ஜனாதிபதி சந்திரிகா தமது பொறுப்பில் எடுத்துள்ளார். இது தொடர்பான அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது.

கடந்த செவ்வாய்கிழமை ஊடகத்துறை அமைச்சு உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுக்களை தமது பொறுப்பில் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா, நான்கு அரச ஊடக நிறுவனங்களுக்கும் புதிய தலைவர்களை நியமித்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாகவே அரச ஊடகங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி, லேக்ஹவுஸ் ஆகிய நிறுவனங்களை ஜனாதிபதி (10 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் எந்த நேரத்திலும் ஊரடங்குச் சட்டம் அமுலாகலாம்!

## தனது பிடியை இறுக்குகிறார் சந்திரிகா

(கொழும்பு)

**ஆளும்கட்சி, எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் மோதல்களைத் தடுப்பதற்காக -எந்த நேரத்திலும் கொழும்பு நகரில் ஊரடங்குச் சட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா அமுல்செய்யலாம் என நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.**

மூன்று நாள் விஜயமாக அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று காலை 8 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவுள்ளார்.

மூன்று அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்து - நாடாளுமன்றத்தை இருவார காலத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா ஒத்திவைத்துள்ள நிலையில், பிரதமர் நாடு திரும்பியதும் முக்கிய முடிவுகள் எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று நாடு திரும்பும் பிரதமருக்கு மக்களின் ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் பெரியளவிலான வரவேற்பை வழங்க ஐ.தே.மு.அமைச்சர்கள் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களைத் திரட்டி விமான நிலையத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் சோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன!

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் நேற்றுமுன்தினம் அமுல்செய்யப்பட்டதைத் தொடர்ந்து ,- படையினர் தமது சோதனைச்சாவடிகளையும், வீதித் தடைகளையும்- குறிப்பாக கொழும்பு நகரில் அதிகரித்துள்ளனர்.

நாடு முழுவதும் பாதுகாப்புப் பலபபடுத்தப்பட்டிருப்பதுடன், வீதிச் சோதனைகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது குறித்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்,

வாகனங்களில் செல்வோர் மற்றும் பாதசாரிகளிடம் அடையாள அட்டைகளைப் பரிசோதிக்கும் நடைமுறை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொலிஸாருடன் இணைந்து படையினரும் முக்கிய (10 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் குறுகிய காலத்துக்கே

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

## பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுக்கள்; மீளவும் ஒப்படைக்கப்பட வேண்டும்!

# குறுகிய காலத்துக்கே

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலநிலை குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டது. இதை, வெளிநாட்டுத் தூதுவர்கள் தமது நாடுகளுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலானது நிதிய அமைச்சின் கடிதத் தலைப்பிலேயே வெளியாகியுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜினதாஸ பீரிஸ் தெரிவிக்கையில், இந்த செய்தி தொடர்பாக வெளிநாட்டு அமைச்சிற்கு ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

எனினும், நிதியமைச்சரின் கடிதத் தலைப்பில் இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளமை குறித்து அவர் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. (01)

# அரசியல் குழப்ப நிலைகளால் போர் நிறுத்தம் பாதிக்கப்படாது

## ஜனாதிபதி செயலகம் அறிக்கை

நாட்டில் அரசியல் பிரச்சினை ஏற்பட்டுள்ளபோதும், போர்நிறுத்த உடன்பாடு உரியமுறையில் முன்னெடுத்துச்செல்லப்படும் என, ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் விடுதலைப் புலிகளுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் வகையில் - ஜனாதிபதி திறந்த கொள்கையைக் கொண்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் யுத்தம் ஏற்படாது என்ற உறுதிமொழியை நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி வழங்கியுள்ளதாகவும், ஜனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

பிரதமரின் சமாதான முயற்சிக்கு வழிகாட்டும் பணியை ஜனாதிபதி தொடரவுள்ளதாகவும், அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# மீளவும் ஒப்படைக்கப்பட வேண்டும்!

## அமைச்சரவை கூடித் தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுப் பதவிகளையும் மீண்டும் அந்தந்த அமைச்சர்களிடம் ஒப்படைக்குமாறு, அமைச்சரவை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானம் குறித்து, விளக்கம் தெரிவித்த போது, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட அமைச்சுப் பதவிகள் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அத்தோடு, ஜனாதிபதி நாடாளுமன்றத்தை உடன் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதியின் இந்தத் தீர்மானங்கள் சமாதானத்தைக் குழப்புவதாக அமையும் என அமைச்சரவை கருதுகின்றது.

அத்தோடு அரச நிறுவனங்களின் பதவிகள் தொடர்பாக ஜனாதிபதி சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளபடி, பிரதமரின் ஆலோசனை இன்றித் தீர்மானங்களை மேற்கொண்டமை கண்டிக்கத்தக்கது எனவும் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

### கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால திட்ட வரைபை எதிர்த்து, இன்று தேசாபிமானிகள் அமைப்பு கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றினை நடத்தவுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழகத்திலிருந்து 17 அகதிகள் தலைமன்னார் வந்தடைந்தனர்

இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து 17 இலங்கை அகதிகள் கடந்த செய்வாய்க்கிழமை தலைமன்னாரை வந்தடைந்தனர்,

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தலைமன்னாரை வந்தடைந்த 14

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு சபையைக் கூட்டி ஜனாதிபதி ஆராய்ந்தார்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவால் நேற்று பாதுகாப்புச்சபை கூட்டப்பட்டு, நாட்டின் தற்போதைய நிலவரம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்தப் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் முப்படைத்தளபதிகள், பதில் பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், அவசரகால நிலையின் கீழ், சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்குரிய வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது (01)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.

எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1753)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள் கருவாட்டுக்கடைகள் கோழிக் கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம், விளம்பர சேவைக் குத்தகை என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2004

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாகட்டுக்கடைகள், கோழிக்கடை, துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம், விளம்பர சேவை நிலையம் ஆகியவற்றை 01.01.2004 ஆம் திகதி முதல் 31.12.2004 ஆம் திகதி வரையான ஒரு வருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரை யிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் 28.11.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 12.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கேள்விப் பிணைப்பணமும், கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 300 (பெறுமதி சேர் வரியுட்பட)வும் செலுத்துவதன் பேரில் 27.11.2002 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 3 மணி வரையும் யாழ்.மாநகர சபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களின் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 28.11.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 12.30 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 28.11.2003 ஆம் திதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு கேள்விச்சபையினால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்கமுடியும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### குறிப்பு

1. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையின் 50 வீதத்திற்குச் சமனான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு வங்கி உத்தரவாத முறி சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தைகளை குத்தகைக்குப் பெறுபவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் மூன்று வீதத்துக்கு (3மூ) மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கரண வண்டிக்கு ரூபா 2.00 வும், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 4.00 வுக்கும் மேலதிகமாக பாதுகாப்பு வரி அறவிடக்குகூடாது.
4. தங்களால் கோரப்படும் கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 20 வீதம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்) செலுத்தப்படல் வேண்டும்.
5. இறைச்சிக்கடைகள், ருவாட்டுக்கடைகள், விளம்பர சேவைக்கான நிலையத்திற்கும் மாதாந்த வாடகை செலுத்தப் படல்வேண்டும்.
6. ஜின்னா வீதியில் இருந்த இறைச்சிக்கடைகளுக்குப் பதிலாக மானிப்பாய் வீதியில் தனியார் காணியில் இறைச்சிக் கடைகள் நடாத்த அனுமதி வழங்கப்படும். எனினும் இடத்தை குத்தகைக்காரரே தெரிவு செய்தல் வேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
7. பாசையூர் பகுதியில் உள்ள இறைச்சிக்கடைகள் இராணுவ காவலரண்களுக்குள் அமைந்திருப்பதால் குத்தகைக் காரரே இடத்தை தெரிவுசெய்யவேண்டும். அவ்விடம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

| தொ. இல | பொதுச் சந்தைகள் | | மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (20% பெறுமதி சேர்வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01. | பண்ணை மீன் சந்தை | | 10 000.00 | 19 05400.00 |
| 02. | பெரிய கடைமரக்கறிச் சந்தை | | 10 000.00 | 6 48500.00 |
| 03 | குருநகர் சந்தை | | 10 000.00 | 10 58000.00 |
| 04. | செங்குந்தா சந்தை | | 10 000.00 | 5 29200.00 |
| 05 | நாவந்துறை சந்தை | | 5 000.00 | 99 000.00 |
| 06. | பாசையூர் சந்தை | | 2500.00 | 44 000.00 |
| 07. | அரியாலை சந்தை | | 2500.00 | 51 000.00 |
| 08. | புங்கன்குளம் சந்தை | | 2500.00 | 16 500.00 |
| 09. | கொழும்புத்துறை சந்தை | | 1000.00 | 3 300.00 |
| 10. | கஸ்தூரியார்வீதியிலுள்ள துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம். | | 2500.00 | 55 300.00 |
| 11. | விளம்பரசேவைக் குத்தகை | | 5000.00 | 1 98300.00 |
| | இறைச்சிக்கடைகள் | கடை இல. | | |
| 01. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 36 700.00 |
| 02. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 04 | 2500.00 | 38 800.00 |
| 03 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 05 | 2500.00 | 26 000.00 |
| 04. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 06 | 2500.00 | 25 000.00 |
| 05 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 08 | 2500.00 | 25 000.00 |
| 06. | பண்ணை கருவாட்டுக்கடை | 02 | 2500.00 | 12 000.00 |
| 07. | பண்ணை கருவாட்டுக்கடை | 03 | 2500.00 | 20 400.00 |
| 08. | பண்ணை கோழிக்கடை | 07 | 2500.00 | 30 250.00 |
| 09. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 37 900.00 |
| 10. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 02 | 2500.00 | 32 600.00 |
| 11. | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 38 000.00 |
| 12. | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | 02 | 2500.00 | 45 700.00 |
| 13. | நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை | 01 | 5000.00 | 3 05000.00 |
| 14. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 01 | 5000.00 | 2 82000.00 |
| 15. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 02 | 5000.00 | 1 72500.00 |
| 16. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 03 | 5000.00 | 1 93700.00 |
| 17. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 04 | 5000.00 | 1 22400.00 |
| 18. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 05 | 5000.00 | 1 66900.00 |
| 19. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 06 | 5000.00 | 20 1300.00 |
| 20. | குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | 07 | 2500.00 | 10 500.00 |
| 21. | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 89 100.00 |
| 22. | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | 02 | 2500.00 | 40 400.00 |
| 23. | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 70 300.00 |
| 24. | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 03 | 2500.00 | 74 800.00 |
| 25. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 66 000.00 |
| 26. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 02 | 2500.00 | 53 600.00 |
| 27. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 03 | 2500.00 | 24 000.00 |
| 28. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 04 | 2500.00 | 10 000.00 |
| 29. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 05 | 2500.00 | 10 500.00 |
| 30. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 06 | 2500.00 | 6 900.00 |
| 31. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 07 | 2500.00 | 10 700.00 |
| 32. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 08 | 2500.00 | 6 100.00 |
| 33. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 09 | 2500.00 | 6 100.00 |
| 34. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | 10 | 2500.00 | 6 800.00 |
| 35. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | 11 | 1000.00 | 3 900.00 |
| 36. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | 12 | 1000.00 | 3 900.00 |
| 37. | ஜின்னா வீதியில் ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 17 500.00 |

முக்கிய குறிப்பு:- குத்தகை நிலுவைப்பணம் செலுத்தவேண்டியவர்களும், தவறுநர் பட்டியலில் உள்ளோரும் கேள்விப்படிவம் சமர்ப்பிக்கமுடியாது.

**இ.இராமலிங்கம்,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

**மாநாகர சபை அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்,**
**2003.11.05**

(சி1777)

# முழுநிலா கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புனித பத்திரிசியார் (சென். பற்றிக்ஸ்) கல்லூரி வீதியில் அமைந்துள்ள அகவொளி கல்விநிலையத்தில் நாளை 'முழுநிலா' கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

நாளை மாலை 3.30 மணிக்கு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மெய்யியல் பேராசிரியர் அருட்திரு போல் றொஹானால் 'மரபுவழிப் பண்பு களின் தோற்றம்' எனும் பொருளில் உரையாற்றவுள்ளார்.


# கல்வியியல் வெளியீட்டு நிலையம்

நடாத்தும்

## 'கல்வியியலாளன்' ஆய்வு இதழ் வெளியீடு -2003

இடம்:- நூலக கேட்போர் கூடம்
யாழ். பல்கலைக்கழகம்

காலம்:- 08-11-2003 சனிக்கிழமை பி.ப 3மணி

மேற்படி வெளியீட்டு நிகழ்வுக்கு கல்விப்புலம் சார் சமூகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரதி ஒன்றின் விலை - ரூபா 250.00**

கல்வியியல்
வெளியீட்டு நிலையம்
யாழ்ப்பாணம்

(சி/1781)



# வடமாகாண அதிபர்கள் சங்கம் நடத்தும் கல்வி அபிவிருத்தி நிதிக்கான

# 'கலைக்கோலங்கள்'

2003 அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் தேசியமட்டத்தில் வெற்றிபெற்ற மாணவர்களின் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளின் மேடையேற்றம்.

காலம் :- 09-11-2003 ஞாயிறு பி.ப.2.00 மணிக்கு
இடம் :- யாழ். வீரசிங்கம் மண்டபம்.

அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

வடமாகாண அதிபர்கள் சங்கம்.

(சி-1785)


# யாழ்ப்பாணம் மாநகரசபை

## பொதுமக்களுக்கான ஓர் அறிவித்தல்

மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் பல வீதிகளில் பல்வேறு வகை யான கட்டப் பொருட்கள், கழிவு இரும்புகள், வாகன உதிரிப்பாகங்கள் போன்றவை பொறுப்பற்ற விதத்தில் பொதுமக்களினால் போடப்படுவதனால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாகவும், வீதி விபத்துக்களை ஏற்படுத் தும் காரணிகளாகவும் அமைந்துள்ளதனால் அவ்வாறான பொருட்களை எக்காரணம்கொண்டும் வீதிகளில் போடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு யாழ். நகர மக்கள் அனைவரையும் தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தவறுவோர் இனங்காணப்பட்டு தண்டிக்கப்படுவது தவிர்க்கமுடியாத தாகிவிடும் என்பதையும் தயவுசெய்து கவனத்தில்கொள்ளவும்.

(இ.இராமலிங்கம்)
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(சி-1779)

# கூறுவிலை கோரல்

## கொழகாமத்திலிருந்து பளை வரைக்குமான 33 கேவி மின்மார்க்கம் அமைப்பதற்குத் தடையாக உள்ள மரம், செழ கொழகளை அகற்றுதல்

மேற்படி வேலைக்கான கூறுவிலை தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் களிடமிருந்து இலங்கை மின்சாரசபை வடமாகாண கேள்விச் சபையால் கோரப்படுகின்றது.

இக்கூறுவிலைக்கான கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களை மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா.250 ஐச் செலுத்தி 2003.11.13 ஆம் திகதிவரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை அலுவலக நாட்களில் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கூறுவிலைப் படிவங்களின் இரு பிரதிகளில் மூலப்பிரதி வேறாகவும், இணைப்பிரதி வேறாகவும் கடித உறையில இடப்பட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கூறு விலையின் பெயர், முடிவுத்திகதி என்பவற்றைக் குறிப்பிட்டு, அரக்கு முத்திரையிட்டு 2003.11.14 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது இவ்வலுவலகத்தில் உள்ள கேள்விக் கோரல் பெட்டி யிலோ சேர்ப்பிக்கலாம். சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கே திறக்கப் படும்.

தாமதமாகவோ, இவ்வலுவலகத்தில் வழங்கப்படாத பத்திரங்களிலோ சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

**பிரதிப் பொது முகாமையாளர்,**
**இலங்கை மின்சாரசபை,**
**536/01, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**2003.11.05.**

**தலைவர்,**
**கேள்விக் கோரல் சபை,**
**வடமாகாணம்.**

(சி-1780)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# லேக் ஹவுஸ், ரூபவாஹினி தலைவர்கள் மாற்றம்; சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முடிவு!

(கொழும்பு)

ரூபவாஹினி, லேக்ஹவுஸ் ஆகியவற்றின் தலைவர்களை மாற்றியமை தொடர்பாக, சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று, அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் -மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நேற்றைய கூட்டத்தில் மேலும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

ரூபவாஹினித் தலைவரை மாற்ற வேண்டுமாயின், நிதியமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். லேக்ஹவுஸ் தலைவரை மாற்றவேண்டுமாயின் திறைசேரியின் அனுமதியைப் பெற்றிருக்கவேண்டும். இந்த வகையில் இரண்டு அனுமதியையும் பெறாமல் ஜனாதிபதி ரூபவாஹினி, லேக்ஹவுஸ் ஆகியவற்றின் தலைவர்களை மாற்றியமை நீதிமன்றுக்கு எடுத்துச்செல்ல வேண்டிய பிரச்சினை ஆகும். எனவே, ரூபவாஹினி, லேக் ஹவுஸ் ஆகியவற்றின் தலைவர்களை மாற்றியமை தொடர்பாக, சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட இன்னொரு தீர்மானத்தின்படி நாடாளுமன்றில் தனக்கு இருக்கும் பெரும்பான்மையை நிரூபிக்க, ஜனாதிபதி உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும் என்று, ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியைக் கேட்கவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போது 130 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக கருதுவதனால், பெரும்பான்மையை நிரூபிக்க ஜனாதிபதி உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும் என்று, ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இன்னொரு தீர்மானத்தின்படி, கட்சி உறுப்பினர்களை உடனடியாகக் கூட்டி நாட்டு நிலைமைகளை விளக்கவேண்டும் என்பதாக அமைந்துள்ளது.

இவ்வாறான தீர்மானங்கள் நேற்றைய அமைச்சரவைக் கூட்டதில் எடுக்கப்பட்டுள்ளன. (01)



தற்போதைய அரசியல் நிலமைகள் தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடன் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், ராஜித சேனாரத்ன ஆகியோர் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்துவதனைக் காணலாம்.

# இலங்கைக்கான விஜயங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்!

## பிரித்தானியா நாட்டுமக்களுக்கு அறிவுறுத்தல்

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தையடுத்து, இலங்கைக்கு உல்லாசப் பயணம் மற்றும் தேவையற்ற விஜயங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு, பிரித்தானிய அரசாங்கம் தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஆலோசனையின் பேரிலேயே இந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் - விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், இலங்கைக்கான சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளமுடியுமென பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியிருந்தமை தெரிந்ததே.

இவ்வாறு பிரித்தானிய அரசாங்கம் தனது பிரஜைகளை இலங்கைக்கு விஜயம் செய்வதைக் கட்டுப்படுத்துமாறு கோரியதைத் தொடர்ந்து வேறு சில ஐரோப்பிய நாடுகளும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (01)

# முஸ்லிம்களின் தீர்வு குறித்து ஆராயும் முன்னோடிக் கூட்டம் இடம்பெற்றுள்ளது

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களின் சார்பாக முன்வைக்கப்படவுள்ள தீர்வுயோசனை குறித்து ஆராய்வதற்கான முன்னோடிக் கூட்டம் ஒன்றை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நேற்று முன்தினம் கூட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கூடிய இந்தக் கூட்டம் தொடர்பாக, அந்தக் கட்சியின் ஊடக ஆலோசகர் ஏ.ஹபீஸ் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இன்னும் இரண்டு மாதங்களில் முஸ்லிம்கள் சார்பில் முன்வைக்கப்படவுள்ள இந்நாட்டு முஸ்லிம்களின் பாதுகாப்பு, இருப்பு, உரிமைகள், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனித்தரப்பு அந்தஸ்து, வட-கிழக்கு முஸ்லிம்களுக்கான தனியான சுயாட்சி அலகு என்பவற்றை உறுதிப்படுத்தக்கூடிய மாற்று யோசனைகளை அடிப்படையாக வைத்தே, சமகால அல்லது எதிர்கால தேசிய அரசியல் நெருக்கடி நிலைமைகளை அணுகுவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற கட்சியின் அரசியல் பீட கூட்டத்திலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், சமாதான முன்னெடுப்புக்கள் மூலம் மட்டுமே இனப் பிரச்சினைக்கான இடைக்கால நிரந்தரத் தீர்வுகள் எட்டப்படவேண்டும் என்ற முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாக இருப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள மாற்று யோசனைகளில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது பற்றியும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தியுள்ள உடன்பாட்டை, விடுதலைப் புலிகளே தற்போது கேள்விக்குறியாக்கியிருப்பது பற்றியும் நீண்டநேரம் விரிவாக ஆராயப்பட்டது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி சம்பந்தமாக, கட்சியின் தீமானங்களை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பீடமும், அதியுயர் பீடமும் அவ்வப்போது உடனுக்குடன் கூடி மேற்கொள்வதாகவும் முடிவு செய்யப்பட்டது.

அடுத்த கூட்டம் - எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. தேவையேற்படின் அதற்கு முன்னரும் கூடி கலந்தாலோசிப்பது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (07)

# மக்கள் ஆணைபெற்ற எமது கட்சியை அவர்களால் நிராகரிக்கப்பட்ட கட்சி குழப்புகிறது

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தை, மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சி அரசியல் குழப்பநிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில், அலரிமாளிகையில் வைத்து உரையாற்றியபோது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றியபோது தெரிவித்ததாவது

ஜனாதிபதியின் தீர்மானங்கள் ஜனநாயகத்திற்கு விரோதமானது. அந்த நடவடிக்கைகளால் எந்த நன்மையும் அடையமுடியாது.

பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்கிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் பல சலுகைகள் அளிக்கப்படவுள்ளது. இந் நிலையில் ஜனாதிபதி அவற்றை குழப்ப முயன்றுள்ளார்.

எனினும் இத்தகைய குழப்ப முயற்சிகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. மக்களின் ஆதரவைக் கொண்டு நாம் எல்லாவற்றையும் சாதிக்க முடியுமென நம்புகிறோம் என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் இம்மாத இறுதிக்குள் நாடாளுமன்றில்!

## நிதியமைச்சர் சொக்ஸி தெரிவிப்பு

அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டம் இம்மாத இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு நிதியமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்துள்ளார். நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதி நாடாளுமன்ற அமர்வுகளை இம்மாதம் 19 ஆம் திகதிவரை ஒத்திவைத்துள்ளார். இதனால், 12 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள வரவு-செலவுத் திட்ட அறிக்கை சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் அமைப்பின் கீழ், இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரம் பெற வேண்டும்.

ஜனாதிபதி நாடாளுமன்றை 15 நாட்களுக்கு ஒத்திவைக்கமுடியும். பின்னர், அவை நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றே மீளவும் ஒத்திவைக்கமுடியும்.

ஆகவே இம்மாதம் 19 ஆம் திகதிக்கு பின்னர் வரவு - செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் வாய்ப்பு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இத்துடன், வரவு - செலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு, நான்கு எண்களில் சம்பள அதிகரிப்பை வழங்க தீர்மானித்திருப்பதாக சொக்ஸி மேலும் தெரிவித்தார்.

# சமாதான நடவடிக்கைகளை இலகுவில் திசைதிருப்பிவிட முடியாது!

## நியுஸிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

இரண்டு வருடங்களுக்கு மேலாக தமிழ - சிங்கள மக்களிடையே உருவாகியுள்ள சமாதான நம்பிக்கையை, இலகுவாகத் திசைதிருப்பிவிடமுடியாது.

இவ்வாறு நியூஸிலாந்தின் ‘உண்மை அறியும் குழுவின்’ தலைவரான கீத் லொக்ஸி தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக்கான தனது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர், செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்த கீத் லொக்ஸி-விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உட்பட பல முக்கிய பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்புக்களின்போது, சமாதான நடவடிக்கைகளின் வளர்ச்சி பற்றி முக்கியமாக ஆராயப்பட்டது. தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாகவுள்ள காரணிகள் பற்றிப் பலரும் - கீத் லொக்ஸிடம் எடுத்துக் கூறினர்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக, அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் நிலைத்து நிற்கும். ஜனாதிபதி அவற்றைக் குழப்புவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்துமே சுயலாப அரசியலை மையமாகக் கொண்டவை என, நான் - இலங்கையில் சந்தித்த அநேகமானோர் என்னிடம் எடுத்துக் கூறினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகத் திட்டவரைபிலேயுள்ள விடயங்கள், பல பேசித்தீர்க்கப்படக் கூடியவை.

இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பினருமே சமாதானம் மலர வேண்டும் என்பதில் அதிக ஆவலாக உள்ளனர்.

இராணுவத்தினரில் அநேகமானோர் சமாதானத்தையே விரும்புகிறார்கள்.

அனைத்து தரப்பினருடைய பங்களிப்புகள் சமாதான முயற்சிகளிலேயே இருப்பதால், அவை விரைவில் வெற்றியடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கீத் லொக்ஸி தனது இலங்கை விஜயத்தின்போது, யாழ்.குடாநாட்டுக்கும் வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பிரதம நீதியரசருக்கு எதிராக மீண்டும் பிரேரணை கொண்டுவந்தால் எதிர்ப்போம்!

## நீதிச் சேவையினர் தெரிவிப்பு

(கொழும்பு)

மீண்டும் ஒரு முறை பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்பட்டால், தொழிற்ச்சேவையில் உள்ள நீதிச் சேவை ஊழியர்கள் போராட்டம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை நீதிச்சேவையில் முதன்முறையாக இவ்வாறான ஒரு குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த விடயம் வரவேற்கத்தக்க விடயம் அல்ல என்றும கூறப்பட்டுள்ளது.

அரசின் தலையீடுகள் அதிகமாக நீதிச்வேவையில் காணப்படுகின்றன. அவ்வாறான தலையீடுகள் அரசியலதிகாரத்தைப் பாதிக்கும் செயல்களாகும்

அரசியலில் இவ்வாறு ஏற்படுகின்ற குற்றவியல் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்களாகவே கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்த வார பலன்கள்

## 07.11.2003 ~ 13.11.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| சந் | ராகு | | சனி |
| செவ் யுரே | 7 ப. 10-17 மேட-சந்<br>08 ப. 02-27 விரு-புத<br>09 இ. 10-51 இட-சந்<br>12 ப. 11-51 மிது-சந் | | |
| நெப் | | | குரு |
| | சுக் | சூரி<br>புத, கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் முயற்சிகளில் சிரமம், செலவுகள் இருக்கும் பணவரவு ஓரளவு இருப்பினும், செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். வீட்டில் உறவினர்களின் வருகை கூடுதலாகக் காணப்படும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறுவதில் தாமதம் ஏற்படும். பிரயாணங்களில் அலைச்சல் கூடுதலாகக் காணப்பட்டாலும், குறிக்கோள் நிறைவுபெறும். திருமணம் சம்பந்தமான விடயங்களில் காலதாமதங்கள் காட்டும். புதிதாக உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு தாமதத்தின்மேல் அனுகூலம் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக நடப்பதுபோல் காணப்பட்டாலும், பணவரவு குறையும். மாணவர் கல்வியில் உற்சாகமும், நற்பயனும் பெறுவர்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு இவ்வாரம் மகிழ்ச்சியாகக் கழியும். திடீர் வருவாய்கள் ஏற்படுவதன் மூலம், பொருளாதாரம் விருத்தியடையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், மனநிறைவும் காணப்படும். தேகசுகம் பாதிப்படையாது. வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். பிள்ளைகள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பலராலும் பாராட்டப்படுவார்கள். காதல் விவகாரங்களில் ஈடுபட்டுள்ளோர் விரைவில் நற்பலன் காண்பதுடன், மகிழ்ச்சியாயும் இருப்பார். பிரயாணங்களின்போதும் புதிய அனுபவங்களைப் பெறுவர். உத்தியோகத்தினர் தமது விருப்பம்போல் வேலைசெய்து, பாராட்டுக்களைப் பெறுவர் வியாபாரிகள் தமது பழைய முதலீடுகளை விற்பனையாக்கி போதிய லாபம் பெறுவர். மாணவர்களுக்கு முன்னேற்றமும், சித்தியும், பாராட்டுக்களும் உண்டு.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுன ராசிக்காரருக்கு தொழில் முயற்சிகளில் எவ்வளவு முயன்றாலும் போதிய லாபம் கிடையாது. பொருளாதாரம் பற்றிய மனச்சஞ்சலம் இருந்துகொண்டிருக்கும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். குடும்பத்திலும் கருத்து வேற்றுமைகள் தோன்றும். மருத்துவச் செலவாலும் பணம் விரயமாகும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை. ஏமாற்றுப் பேர்வழிகளிடமும் அகப்படாமல் விலகவேண்டும். உத்தியோகத்தர்கள் வேலைப்பழுகாரணமாக மனவிரக்தி அடைவர். திருமணமும் இழுபறி நிலையிலேயே இருக்கும் வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். மாணவர்கள் கல்வியில் உற்சாகமிழந்து காணப்படுவர்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



இவர்கள் இவ்வாரம் நன்மை, தீமை கலந்த பலா பலன்களைக் காண்பர். தொழிலில் பிரயாசை அதிகமாகும். வருவாய் கைக்கு வருவதில் தாமதம் காணும். இனபந்துக்களிடையே சிறு சச்சரவுகள், தகராறுகள் தோன்றும். வெளிநாட்டிலிருந்து வரவேண்டிய உதவிகள் தாமதமாகும். திருமணம் சம்பந்தமான விடயங்கள் தாமதித்து நிறைவேறும். மறைமுக எதிரிகளைப் பற்றி அவதானந்தேவை. உத்தியோகத்தை அடைய விரும்பும் இளைஞர்கள் -விரைவில் பயன் பெறுவார்கள். கஷ்டப்பிரதேசங்களிலுள்ளோர் கூடிய இலாபம் பெறுவர். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோருக்கும் இலாபமுண்டு. மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுத்தல் வேண்டும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்க ராசிக்காரர் இவ்வாரம் பல விசேடமான பலன்களைக் காண்பர். தொழில் மூலம் சிறந்த வருவாயைப் பெறுவர். ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் கூடுதலாக ஈடுபடுவர். குடும்ப உறவுகள் திருப்தியாக இருக்கும். வெளிநாடுகளிலிருந்து சுபசெய்திகள் கிட்டும். கொடுக்கல், வாங்கல்களில் பிணக்குகள் இருப்பின் - அவை நன்மையாகத் தீரும். பலராலும் கௌரவிக்கப்படுவர். உத்தியோகத்தினருக்கு வசதியான இடமாற்றங்கள், தொழில் மாற்றங்கள் கிடைக்கும். இல்வாழ்க்கையில் இணைய விரும்புவோர் மகிழ்ச்சியடைவர். வியாபாரத் துறையிலுள்ளோருக்கு பொருட்கள் அமோக விற்பனையாகும், பணம் சேரும். மாணவர்கள் பரீட்சைகளில் சித்தி, பாராட்டுக்கள் பெறுவர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



இந்த இராசியிற் பிறந்தவர்கள் பல நன்மையான பலன்களைக் காண்பர். தொழில் விருத்தியும், வருவாயும் கிட்டும். எதிர்பாராத பணவருவாய் வந்துசேரும். புதிதாக காணிகள், வீடுகள் சேர இடமுண்டு. தனித்தொழில் செய்வோர் புதிய முதலீடுகளால் இலாபம் பெறுவர். தேகசுகம், குடும்பசுகம் பாதிப்படையாது. திருமணத்தை எதிர்நோக்கும் பெண்பாலார் விரைவில் பல னடைவர். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படலாகும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப்பெறுவர். வியாபாரத்துறையில் ஈடுபட்டுள்ளோர். கூடிய விற்பனையும், இலாபத்தையும் பெறுவர்.

தொழில் சம்பந்தமான பிரயாணங்களை மேற்கொள்வர். மாணவர்கள் போட்டிகளில் வெற்றிகாண்பர்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு வேலைப் பழு அதிகமாக இருக்கும். வரவிலும் பார்க்கச் செலவு கூடுதலாகக் காட்டும். குடும்ப உறவுகளில் சற்று விரிசல் காணும். உடல் நலம் பாதிப்படையாது. எல்லாவற்றிலும் சற்று நிதானமாக நடந்துகொண்டால், நல்ல முடிவுகள் ஏற்படும். பிரயாணங்களின்போது, உடமைகளை இழக்கும்நிலை உண்டு. விவசாயத் துறையினருக்கு போதிய இலாபம் கிட்டும். ஏனைய வியாபாரிகளுக்கு நல்ல வியாபாரம் நடைபெற்றாலும், இலாபம் சுமாராகவே இருக்கும்.

உத்தியோகத்தர்கள் வெகு நிதானமாகச் செயற்படவேண்டும் இல்லையேல், அதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகவேண்டியிருக்கும். மாணவர்கள் ஊக்கத்துடன் செயற்பட்டால் வெற்றியுண்டு.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியினருக்கு நற்பலன்கள் குறை வாகவே இருக்கும். எவ்வளவு முயன்று தொழில் செய்தாலும், போதிய இலாபம் கிடையாது. மனவிரக்தியும், சஞ்சலமும் காணப்படும். இடையிடையே தேகசுகக் குறைவும் காட்டும். எனவே, வைத்தியச் செலவாலும் பணம் விரயமாகும். வெளியிலிருந்து கிடைக்க வேண் டிய பண உதவி தாமதப்படும். இனத்தவர் களின் வருகையாலும், பணச் செலவுகள் அதிகரிக்கும்.

வெளியூர்ப் பிரயாணங்களை நாடுவோர் தாமதப்பட நேரிடும். காதல் விவகாரங்கள் தோல்வியைத் தரும். உத்தியோகத்தர்கள் தொழில் செய்வதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வியாபாரிகள் தமது சோம்பல்த் தனத்தால் இலாபத்தை இழப்பர். மாணவர்கள் விளையாட்டில் கூடிய அக்கறை காட்டுவர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



இவர்கள் இவ்வாரம் பல வகையாலும் நற்பலன்களைக் காண்பர். எடுத்த கருமங்கள் யாவும் இனிதே அனுகூலமாகும். செய் தொழில்மூலம் நிறைந்த வருமானத்தைப் பெறுவர்.

வெளிநாடுகளிலிருந்து பிள்ளைகளாலும் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் காணும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெறும். திருமணத்தை எதிர்பார்த்திருப்போர் கருமம் கைகூடப் பெறுவர். தூரதேசப் பிரயாணத்தை விரும்பு வோருக்கும் காலங்கனிந்துள்ளது. வியாபாரத்திலுள்ளோருக்கு, தேங்கியிருந்த முதலீடுகள் விற்பனையாகும். புதிய முதலீடுகளைச் செய்வதற்கும் உகந்த காலமாகும். மாணவர்கள் ஊக்கத்துடன் காணப்படுவர். சித்தியும், வெற்றியும் கிட்டும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசிக்காரருக்கு செய் தொழிலில் முன்னேற்றம் உண்டு. முயற்சிக்கேற்ப இலாபம் பெறுவர். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். இனபந்துக்களின் வருகையால், மகிழ்ச்சியும் கலகலப்பும் வீட்டில் காணப்படும். தேகாரோக்கியம், குடும்ப சுகம் நன்றாக அமையும். சிலருக்கு கடன் உதவிகள் கிடைக்கலாம். தனித் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர், தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் பல முன்னேற்றங்களைக் காண்பர். வெளியூர் பயணங்களில் தடங்கல்கள் இராது. உத்தியோகத்தில் உள்ளோர் அதிகாரிகளின் நன்மதிப்பையும், பாராட்டையும் பெறுவர். வியாபாரத்தில் உள்ளோர் கூடிய இலாபம் பெறுவர். மாணவர்கள் திருப்தியடைந்தவர்க ளாகக் காண்பர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



இவர்கள் தமது தொழில் முயற்சிகளில் குறைந்த வருவாயையே காண்பர். மனதில் நிம்மதியின்மை காணப்படும். தேகாரோக்கியக் குறைவால் மருத்துவச் செலவும் காணப்படும். தொடங்கும் கருமங்கள் நிறைவு பெறுவதில் தாமதம் காட்டும்.

இன பந்துக்களிடையே வீண் சச்சரவுகள் ஏற்படலாம். கொடுக்கல், வாங்கல் தொல்லை களும், தலையிடியைக் கொடுக்கும். எப்படிச் சமாளித்தும் நிம்மதி காணமுடியாது.

வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும். வாடிக்கையாளர்கள் விலகிப்போக நேரிடும். திருமணக் கருமங்கள் தாமதமாகும் மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்தவர்களாகக் காணப்படுவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி)*



மீன ராசியில் பிறந்தவர்கள் நன்மை, தீமை கலந்த பலன்களையே காண்பர். செய்தொழில் களில் பிரயாசையின் மேல் வருவாய் கிட்டும். வருவாய்கேற்ப செலவு செய்தல் நன்று. குடும்பத்தில் சிறு கருத்து வேற்றுமை காணப்பட்டாலும், அவை உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படும்.

சிலருக்கு கடன் தொல்லைகள் இருப்பின் அவை தீரும். இல்லறவாழ்வில் இணைய விரும்புவோர் சற்றுத் தாமதத்தின் மேல் அனுகூலம் காண்பர்.

வெளிநாட்டுப் பயணத்தை எதிர்பார்ப்போருக்கு ஏமாற்றமே கிடைக்கும். வியாபாரிகள் மந்தமான நிலையையேகாண்பர்.

வாகனங்களைச் செலுத்துவோர் விபத்துக்கள் பற்றி அவதானமாக நடக்கவும். மாணவர்கள் ஊக்கமுடையவர்களாக இருப்பர். ◆

# பருவ மழை காரணமாக போக்குவரத்துக்கு இடர்

வன்னியில் பருவமழை பெய்யத் தொடங்கியுள்ளதால், வீதிகளின் சீரின்மை காரணமாக மக்கள் போக்குவரத்து செய்வதில் பல்த்த இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

படையினர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளினால், 20 ஆண்டுகளுக்கு மேலாக இங்குள்ள வீதிகளின் புனரமைப்பு முழுமையான முறையில் இன்று வரை செய்யப்படவில்லை.

போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு, ஒன்றரை ஆண்டுகள் கடந்த நிலையில், வீதிகள் முழுமையான முறையில் புனரமைப்பு செய்யப்படவில்லை.

இதேவேளை, படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு, சத்ஜெய, கடற்காற்று, வலம்புரி போன்ற முக்கிய போர் நடவடிக்கைகளின்போது, சாலைகளின் பாலங்கள் மற்றும் மதகுகளை தகர்த்திருந்தனர்.

அப்பாலங்கள், மதகுகள் கூட இன்றுவரை புனரமைப்பு செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன. மழைபெய்யத் தொடங்கியுள்ள இந் நிலையில், வீதிகளை பெருமளவில் வெள்ளநீர் குறுக்கறுத்துப்பாயும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

## காவலாளிகளுக்கு காவற்கூடங்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில், 75 ஆயிரம் ரூபா செலவில் - காவற் கடமையாளிகள் தங்குவதற்கான மூன்று கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# நூலகத்திற்கு நிதி ஒதுக்கீடு

நெடுந்தீவு மேற்கு- பொது நூலகத்திற்கென தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமாரினால், 2004 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின்மூலம், ரூபா 50 000 ஒதுக்கடு செய்யப்பட்டுள்ளது.

இந்ந நிதிமூலம் - பொது நூலகத்திற்கான தளபாடங்கள், நூல்கள், என்பன கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும், இந்த நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு நன்றி தெரிவித்துள்ளதாகவும், நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபைக்கு சொந்தமான இந்தநூலகம் - போதிய கட்டட வசதிகளோ, தளபாடங்களோ, நூல்களோ இன்றியே தற்போது நூலக சேவையில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (113)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : பு.சயன்

முகவரி : நெல்லியடி.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்




# அன்பின் சிநேகிதிக்கு

சென்றவாரம் எனது கடிதத்தை - உனது சோதரிகள் பற்றி பேச வேண்டியுள்ளது என முடித்திருந்தேன். இந்த ஒரு வார காலப்பகுதிக்குள்ளும் உனது சகோதரிகளை நீ பிடுங்கி எடுத்திருப்பாய் "என்ன தவறு விட்டீர்கள். அவன் என்னோடு உங்களைப்பற்றிப் பேசவேண்டும் என்கிறானே" என அவர்களைப் பாடாய்ப் படுத்தியிருப்பாய்.



பாவம் அவர்கள். என்ன செய்வார்கள். தெரிந்தோ, தெரியாமலோ சில தவறுகளை அவர்கள் புரிந்திருக்கிறார்கள். அது பற்றி எதுவுமே புரியாமல், தொடர்ந்தும் சிலர் அந்தத் தவறுகளைச் செய்கிறார்கள். உண்மையில் பிழை அவர்களிடம் இல்லையென்றே நான் நினைக்கின்றேன். அவர்களது அப்பாவும், அண்ணாவும் ஏன் அம்மாவும்கூட - அவர்களைக் கண்டிக்காமல் விட்டிருக்கலாம் அல்லது அவர்களது நடத்தைகளைக் கண்டும் காணாமலும் விட்டிருக்கலாம். இதனால், தாம் புரிவது தவறென்றே தெரியாது, எமது சகோதரிகள் தொடர்ந்தும் அந்தத் தவறுகளையே புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

பண்பாடும், கலாசாரமும் மலிந்துபோயுள்ள எமது யாழ்ப்பாண மண்ணிலா இப்படி மங்கைகள் - எனப் பலரும் பேசிக்கொள்வதை நீ நன்கு அறிந்திருப்பாய். மேடைகளில் முழக்கமிடும் மேதாவிகள் சிலருக்கும், இது இன்று பேசும் பொருளாகிவிட்டது. என்ன இவன் எதையும் சொல்லாமலேயே அடுக்கிக்கொண்டு போகிறானே குற்றச்சாட்டுக்களை என, நீ உனது மண்டையைக் குடைவது எனக்குப் புரிகிறது.

நான் இங்கே கூறும் விடயங்களைக் கண்டு, உனது சகோதரிகள் குமுறவும் கூடும். பொறுமையாகவிருந்து இவற்றைக் கேட்கச்சொல்லு. அதன் மூலமாக இவர்கள் தெளிவுபெறுவதற்கு வாய்ப்புண்டு.

சமாதான சூழல் வந்ததும், ஏ - 9 பாதை திறந்தது. எல்லாமே எம்மை நோக்கி அடுக்கடுக்காய் வந்தது. அடுப்படிக்குள் பாவிக்கும் எரிவாயு தொடக்கம், இப்போது கண்ட இடமெல்லாம் பாவிக்கும் கான்போன் வரை எம் கைகளுக்கு வந்தது. இதைவிட, எத்தனையோ வினைகளும் - தானே எம்மை நாடிவந்தன.

ஏழெட்டு வருடமாய் எம்மைப் பார்க்காதிருந்த எழிலனும், லண்டனால் வந்துபோனான் எமிலியோடு. எமிலி வரும்போது, பலவற்றைக் காவி வந்தாளே! ரீ.வியும், சீ.டி பிளேயரும் மட்டுமா சீமையால் வந்த அவள் கொண்டுவந்து தந்தாள். சீரழிவுகளையுமல்லவா அவள் சேர்த்துக் கொண்டு வந்தாள். சிலவேளைகளில், அவளது நாட்டுக் காலச்சூழ்நிலைக்கும், கலாசாரப் பின்னணிக்கும் அவை சீரழிவுகளாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், பெண்களைத் தெய்வமாய்ப் போற்றிய எம் மண்ணுக்கு, எப்படி அவை சீர்வரிசையாய் அமையமுடியும்?

எமிலியைப் பார்த்துவிட்டு, ஒழுங்காய் இருந்த எம் எழிலினியும் ஏடாகூடமாய் மாறிவிட்டாளே. அதைப்பார்த்த எம் தம்பி காந்தனும் - கட்டைக் கலிசானோடும், கான்போனுடனும் காவாலியாய் திரிகிறானே - அவள் பின்னே.

இத்தனையும் எம் மண்ணில் நிகழ்ந்தால், நாம் பட்ட வேதனைகளுக்குத் தான் விலையேது? பதினாறு வயதிலே பள்ளிக்குப்போக வேண்டிய பாலன் பாசறைக்கு போனானே, எதற்காக? எம் மண்ணின் விடிவிற்காகவல்லவா?

மண்ணின் விடிவு வடிவாகத் தெரிகிறது அருகில். ஆனாலும், விடிவு வரும்வேளையிலே, எம் வானம் இருண்டு போய்விடக்கூடாதல்லவா தெய்வீக மணமும், ஆன்மீகக்குணமும் கலந்த எம் கோயில் வீதிகளில் - சென்ற மணமும், செம்மறிக் குணமும் தலைதூக்கியுள்ளனவே !.

பண்பாட்டு உடையுடன் கோயிலுக்கு வரவேண்டிய பரிமளம் அக்கா பாவாடை சட்டையுடன், கையில் கான்பாக்குடன், காலில் கீல்சுடனுடம் அல்லவா வருகிறார். அர்ச்சனைத் தட்டையோ, பூமாலைப் பையையோ அவள் கையில் காணவில்லை. இப்படியே போனால் என்னாவது எம் காலம். சுயத்தைத் தொலைத்த பின், பெறும் சுதந்திரத்தில் சுவையிருக்காதல்லவா? இந்தச் சேதிகளைப் பக்குவமாய் எடுத்துச்சொல்லு உன் சோதரிகள் பவித்திராவுக்கும், பாமினிக்கும். பாதி உடுப்பு எம் பண்பாட்டிற்குப் பொருந்தாதென்று அவர்களுக்கு அன்பாகச் சொல்லு. அவர்கள் புரிந்து கொண்டு திருந்துவார்கள்.

ஆதிமனிதன் நாகரிகம் என்பதைக் கண்டுபிடித்ததினால்தானே ஆடைகளை அணிந்தான். ஆனால், இன்று ஆடைகளை குறைப்பதுதான் நாகரிகமென கருதுகிறார்களே எம் சகோதரிகள். இதற்கு ஒரு காரணமாக சினிமாவையும் குறிப்பிடமுடியும்.

"பெண்புத்தி பின்புத்தி" என்று கூறும் என் நண்பர்களுக்கு எதிராக நான் இந்த முதுமொழிக்குப் புது விளக்கம் கொடுப்பேன். அதாவது, பெண் புத்தி பின் புத்தி என்பது பின்னால் வருவதை யோசிப்பதைத் தான் குறிக்கிறது. அத்தோடு, "பின்" எனும் ஆங்கில சொல்லிற்கு "ஊசி" எனவும் அர்த்தம் கொடுக்கலாம். எனவே, பெண்ணின் புத்தி ஊசி போன்று கூர்மையானது எனவும் கூறலாம் அல்லவா?

எனவே, இத்தகைய பெருமைகளைக் கொண்டு, எம் இலக்கியக் கதைகளில் காத்திரமான பங்களிப்பை அளித்த பெண்மை - இன்று பொய்மையாய்ப் போவதை நாம் பொறுக்கமுடியாது. புதிய சரிதத்தையே எழுதும் வலுமிக்க சரித்திரநாயகிகளின் சகோதரிகள் அல்லவா நீங்கள்? உடலிலே குண்டைக் கட்டி, கடலையே துளைத்துச்சென்று, எதிரின கதையை முடித்த அங்கயற்கண்ணியின் தங்கைகள் அல்லவா உன்சோதரிகள். அவர்கள் திசை மாறிப்போவதை திரும்பிப்பார்க்காமல்விட்டால், தீமைகள் எல்லோருக்கும் தானே?

எனவே, அப்பாவுக்கும், அண்ணாவுக்கும் அன்பாக எடுத்துச் சொல்லி - தங்கை கவிதாவைக் கொஞ்சம் கண்டித்து வை. நீயும் நல்ல புத்திமதிகளை நர்மதாவிற்கு அடிக்கடி எடுத்துச்சொல்லு? அவர்களும் "அக்கினிப் பறவைகளாக" சிறகை விரிப்பார்கள் சிந்தை தெளிந்து. இது நிச்சயம்.

ஆரோக்கியமான உன் நடவடிக்கைக்கு என்றும் என் துணையிருக்கும். அடுத்த மடலிலும் உனக்கு நிறைய கருத்துக்கள் சொல்வேன்.

புரிந்துகொண்டால் புதுயுகம் என்பது எமக்குப் புதிதாக அமையாது.

**அன்பின் சிநேகிதன்**

# உள்ளூர் உற்பத்திகள் மூலம் கிராமங்கள் வளம் பெறவேண்டும்

**கடந்த 20 வருடங்களுக்கு மேலாக ஆர்.பி என்ற பெயரில் சிறுகைத்தொழில் நிறுவனமொன்றை நடத்தி வரும் புனிதசிகாமணி இரத்தினசேகரன் என்பவரை செவ்விகண்டோம்.**

**பற்பொடி, ஊதுபத்தி, விபூதி, அரிசிமா, குரக்கன்மா, ஊறுகாய், முகப்பவுடர் என, இவரது நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருட்களின் பட்டியல் நீண்டு செல்கின்றது. இவரது செவ்வி எமது வாசகர்களுக்கு ஒரு முன் உதாரணமாக அமையுமென நம்புகிறோம்.**

நேர்காணல்: கா.பஞ்சரத்தினம்

**இந்தக் கைத்தொழில் உற்பத்தித்துறையினை நீங்கள் தெரிவு செய்த காரணத்தினையும், தொழிலினை ஆரம்பிக்கும்போது உங்களுக்குக் கிடைத்த ஒத்துழைப்புகளையும் எம்மோடு பகிர்ந்து கொள்வீர்களா?**

எனது கணவர் கொழும்பில் வேலைசெய்ய முயற்சிப்பதை அறிந்து- எனது தந்தையும், தாயும் அதனை அவ்வளவாக விரும்பவில்லை. தங்களோடு நாங்கள் எப்போதும் இருக்க வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு. எமக்கு ஒரு மில் அனுராதபுரத்தில் இருந்தது. எனது கணவனின் தந்தையாரும் கடைகள் வைத்திருந்தார். அவரது விருப்பத்தை எனது கணவரிடம் சொல்லவே, எனது கணவரும் தனக்குத் தெரிந்த தொழில் பற்றிய விபரத்தைக் கூறியபோது, தந்தையார் தாமே முதலீடு செய்வதாகக் கூறினார். கணவர் முதலில் எனக்குப் பயிற்சி வழங்கினார். பற்பொடி, ஊதுபத்தி, நுளம்புப்பத்தி, முகபபவுடர், சாம்பிராணித்தூள், விபூதி உற்பத்தி செய்யும் செய்முறைகளைக் காட்டித்தந்தார். அந்தப் பயிற்சியின் வாயிலாக நானும் மூன்று மாதத்தில் மூலப்பொருட்களைக் கலக்கும் முறைகளைத் தெரிந்துகொண்டேன். முடிவுப்பொருளுக்கான உற்பத்திச் செலவைப் பார்த்து, விற்பனைக்குரிய விலையைச் சந்தை விலையோடு ஒப்பிட்டுப் பார்த்தோம். மற்ற உற்பத்தியாளர்கள், மொத்த வியாபாரிகளுக்குக கொடுக்கும் விலையைவிட, கூடுதல இலாபம் பெறும் அளவுக்கு நாம் விற்பனையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் என முடிவுசெய்து, பெயர் சூட்டும் படலம் தொடங்கியது. பல பெயர்கள் தெரிவுசெய்தோம். ஒன்றும் திருப்தியாகவில்லை. இறுதியில அவரது பெயரின் ஆங்கில எழுத்தின் முதல் எழுத்தையும், எனது பெயரின் ஆங்கில எழுத்தின் முதல் எழுத்தையும் சேர்த்து, ஆர்.பி (R.P) என்ற பெயரை அமைத்து, தொழிலகத்தை ஆரம்பித்தோம். உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் ஆர்.பி. என்ற பெயரில் வெளிவந்தது.

**சிறு குடிசைத்தொழிலாக ஆரம்பித்த உங்கள் தொழிலகத்தின், இன்றையநிலையினைப் பற்றி எமக்கு எடுத்துக் கூறுங்கள்.**

ஆரம்பத்தில் நாம் ஒரு வித்தியாசமான விளம்பர உத்தியைக் கையாண்டோம். 1984 ஆம் ஆண்டு ஆர்.பி. என்ற எழுத்தை மட்டும் அச்சடித்து, வடபகுதியில் ஒட்டினோம். அந்தக் காலத்தில் புதிய அரசியற் கட்சிகள் உதயமாகிக் கொண்டிருந்த வேளையில், இது என்ன ஆர்.பி. என்று எல்லோரும் கேட்கும் அளவிற்குச் சனங்களின் ஆர்வம் இருந்தது. பின் ஆர்.பி. தொழிலகம் வைபவரீதியாகத் திறக்கப்பட்டது. முதலில் ஆறு யுவதிகளை வைத்தே எமது வேலையைத் தொடங்கினோம்.

ஒரு இலட்சம் ரூபா வரையில் எம்மால் முதலீடு செய்யப்பட்டது. தற்போது - 30, 35 யுவதிகள் வேலை செய்யும் தொழிலகமாக மாறியமை பெருமைக்குரியதாகும். எமது வீட்டிலேயே தொழிலகம் ஆரம்பிக்கப் பட்டது வசதியாக இருந்தது. மூன்று பிரிவாகப் பிரித்து வேலை செய்யப்பட்டது. 3 ஆண்டுகளுக்குப் பின்னா பற்பொடி செய்வதற்கென்றே தனியிடம் எம்மால் கட்டப்பட்டது.

**உங்கள் தொழிலகம் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல், உங்கள் கிராமத்திலேயே செயற்பட்டு வருகின்றது. இதனை நகரப்புறத் தொழிலாக மாற்ற நீங்கள் முயற்சிக்கவில்லையா?**

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு தொழில் இருக்கத்தான் செய்யும். காலத்திற்கு ஏற்றவகையில் கட்டி எழுப்புவதன்மூலம் , அக்கிராமத்தின் அரைவாசி அபிவிருத்தி வேலை முடிந்துவிட்டதற்கு ஒப்பாகும். ஒரு நாட்டின் உணவுத் தேவைகளையும், பிறதேவைகளையும் அநேகமாகப் பூர்த்தி செய்வது கிராமமே. அதேகிராமங்கள் நல்லமுறையில் கவனிக்கப்பட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.



**தங்களது உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களைப் பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

உற்பத்தி செய்யும் பொறுப்பு எனனுடையது. அதைச் சந்தைப்படுத்தும் பொறுப்பு எனது கணவரது வேலையாகும். ஆரம்பத்தில் நகரப்புறங்களில் வரவேற்புகுறைவாகக் காணப்பட்டது. ஆனால், அவரோ சைக்கிளில் சாமான்களைக் கட்டி, ஒரு உதவியாளரோடு வடமராட்சியில் கிராமம் கிராமமாகச் சென்று, அங்குள்ள கடைகளுக்குக் கொடுதது வந்தார். பின்நாளில், நகரப்புறங்களிலும் வரவேற்பு காத்திருந்தது. சைக்கிள் ஓடியவர் - சொந்த வாகனத்தில் வடபகுதியை வலம்வரத் தொடங்கினார். அவரது சொந்தப் பெயர் புழக்கத்தில் அருகி, 'ஆர்.பி' என்று எல்லோரும் சொல்லும் அளவிறகு, அவ் பெயர் விளங்கத் தொடங்கியது.

வன்னி மாவட்டத்திற்கும் செல்லக்கூடிய வாய்ப்புக்கள், வசதிகள் ஏற்பட்டது. 1987 ஆம் ஆண்டில் வடமராட்சியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை - எம்மைக் கதிகலங்க வைத்தது.

போரின் விளைவு எமது தொழிலகத்தையும் விட்டு வைக்கவில்லை. இந்திய இராணுவம் வந்தபின், திரும்பவும் நம்பிக்கையோடு தொடர்ந்தோம. திரும்பவும் வேதாளம் முருஙகை மரத்தில் ஏறியது போன்று, திரும்பச் சைக்கிள் வியாபாரம். வாகனததைக் கொண்டுசெல்ல முடியாது. வாகனத்தைக் கண்டால்போதும்- ஹெலிசுற்றி அடிக்கும். சைக்கிளில் கட்டும்போது, எங்காவது பதுங்கலாம் என்ற நினைப்பே ஆகும். நானும் அம்மா, ஐயாவும் கணவர் வரும் வரை பயத்தோடு இருப்போம், வேலைக்குவரும் யுவதிகள் எண்ணிக்கையும் பயத்தின் காரணமாகக் குறைந்தது.

**உங்கள் தொழிற்சாலையில் அநேகமானோர் பெண் ஊழியர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் சார்பாக உங்கள் பங்களிப்பு என்ன?**

வேலை செய்ய வந்த யுவதிகளில், படிப்பதற்கு வாய்ப்பு இல்லாதவர்களே அதிகம். இரண்டு மாதம் பயிற்சிக்கு ரூபா 500 வழங்கி 3 ஆம் மாதம் ரூபா 1000 ஆகியது. பின்னர் வேலைக் கேற்ற ஊதியம் பொறும்போது- ரூபா 2000 இற்கு மேல் பெறும் அளவுக்கு அவர்கள் ஆரம்பகாலத்தில் இருந்தார்கள். இன்று ரூபா 3000 இற்கு மேல் பெறுபவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கென வரவு இடாப்பு பயன்படுத்தப்பட்டது. வேலை நேரத்தில் வெளியார் யாரும் சந்திக்க அநேகமாக இடம் கொடுப்பதில்லை. அதற்குரிய சந்தர்ப்பமும் இல்லை. வேலைசெய்யும், யுவதிகள் வீட்டிற்குரிய பாத்திரங்களையும் கிழமைச்சீட்டு மூலம் பெறவாய்ப்பு அளிக்கப்பட்டு, தங்களுக்குத் தேவையான சில்வர்ப் பாத்திரங்களைப் பெற்றனர். கல்வி அறிவில் குறைந்தவர்களாக இருந்தாலும், இவர்கள் தங்களைக் காக்குமளவிற்கு எமது தொழிலகம் அக, புறக் கல்வியைப் போதித்திருந்தது. யுவதிகளின் நடையுடை பாவனைகளில் மாற்றம் கண்டோம். இவர்களை வேலைக்கு அமர்த்துவதால், வேறு ஒரு சிரமமும் உண்டு. குறுகியகாலம்தான் இவர்கள் எம்மோடு இருப்பார்கள். திருமணம் ஆகியதும் வீட்டுப் பெண்களாக இருக்கவேண்டும் என்ற சமூக வடடத்துக்குள் நின்று விடுகிறார்கள். என்னைப் பெறுத்தமட்டில் நான் சொல்வதாயின் - ஒவ்வொரு பெண்ணும் ஏதோவொரு தொழில் செய்யத் தெரிந்திருக்கவேண்டும். பெண் பிறக்கும்போது பெற்றோரைச் சார்ந்திருக்கிறாள். பின்னர் கணவரைச் சார்ந்திருக்கிறாள். கணவன் இல்லாக் காலத்தில் பிள்ளைகளைச் சார்ந்திருக்கும் எண்ணம் - சுயதொழில்மூலம் நீக்கப்படும். சுயேச்சையாக இயங்கி, தனைக் காத்துக்கொள்ள முடியும்.

**தொழில் சம்பந்தமான ஆலோசனைகள் மற்றும் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு நீங்கள் யாரிடம் உதவிபெற்று வருகிறீர்கள்?**

தொழில் சார்ந்த ஆலோசனைகளை யாழ்ப்பாண மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திசபை மூலமாகப் பெற்றுக்கொண்டே இருந்தோம். அந்த அபிவிருத்திச் சபையின் வழிநடத்தலில் சுயவேலை வாய்ப்புக் கடன் சில வங்கிகள் மூலமாகச் சுயதொழில் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது. நாமும் அக்கடன் தொகையைப் பெற்று, அதைக்குறித்த தவணையில் கட்டிமுடித்தோம். இருந்தும், பெரிய அளவிலான கடன்களை தமமூடாக அபிவிருத்திச் சபை செயயமுடியாதநிலையில் இருப்பது கவலைக்குரிய ஒன்றாகும்.

இவர்களுக்குரிய சந்தர்ப்பம் சரியான முறையில் வழங்கப்படவில்லை. இவர்கள் எமது பிரதேசத்தின் வளரச்சியில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். எவ்வளவோ கிராமியத் தொழில் சார்ந்த தரவுகளை இவர்கள் வைத்திருந்தாலும், முழு அதிகாரமும் கொழும்பில் இருக்கிறது. இதை எம்மால் உணரமுடிகிறது.

நாட்டில் பெரும் பிரச்சினையான காலத்தில் இவர்கள் தங்கள் அலுவலகத்தை இடம் மாற்றியபோதும், எமது தொழிலகத்திற்கு அடிக்கடிவந்து, எமக்கு நம்பிக்கையூட்டி, எம்மை தூண்டிவிட்டுகொண்டே இருந்தார்கள்.

**தங்களது தொழில் சார்பான எதிர்காலத் திட்டம் என்ன?**

எதிர்கால நடவடிக்கையாக நாம் எமது தொழிலகத்தை விரிவுபடுத்த உத்தேசித்துள்ளோம். ஆரம்பித்திலிருந்த எண்ணிக்கைக்கு அதிகாமான ஆட்களைப் போட்டு, உற்பத்திப் பொருட்களையும் கூடுதலாக்கி விற்பனை செய்யும் உத்தேசம் இருக்கிறது.

நவீன தொழில்நுட்ப அறிவோடு இணைந்து செல்லவும் விருப்பமுண்டு. உற்பத்திக்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது - தரம். இலகுவாகப் பாவனையாளர்கள் வாங்கக்கூடிய, வாங்கும் சக்தியும் கவனிக்கப்பட வேண்டும். பாவனையாளர்களது கையில்தான் எமது எதிர்காலம் இருக்கிறது. அவர்கள் என்றும் எம்மோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

✸

# பால்ரீதியாகப் பெண்களை ஒருபோதும் ஒதுக்கிவிட முடியாது

**(சென்றவாரத் தொடர்ச்சி...)**


அந்தக் கவிதை வரிகளைப் பார்க்கும்போது, கவிஞர் கண்ணதாசன்கூட, தோற்றுப் போய் விடுவாரோவென எண்ணத்தோன்றுகிறது. குறிப்பாக, பாடசாலை மாணவர்கள பலர், தமது பூரண சம்மதத்துடன் தவறான உறவுக்குச் சென்றுள்ளார்கள். அதற்குரிய முக்கிய காரணங்களா ஒரு சிலவற்றைக் குறிப்பிடமுடியும்.

1. 1995 ஆம் ஆண்டுக்குப் பின், யாழ்ப்பாணத்தில் மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதன்மூலமாக தொலைக்காட்சி, ஓடியோ, வீடியோப் பிரதிகள், இணையத்தளங்கள் என்பவற்றின் பாவனைகள் தாராளமயப்படுத்தப்பட்டுள்ளன. பிள்ளைகள் எந்த விடயங்களைப் பார்க்கவேண்டும், எவற்றைப் பார்க்கக்கூடாது என்பதில், பெற்றோர்கள் சிலரும் கவனமெடுப்பதில்லை. இதனால், பல தவறான விடயங்களைப் பிள்ளைகள் பார்ப்பதுதான் இந்தத் துஷ்பிரயோகங்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களாகும்.

2. அடுத்த விடயமாக வெளிநாட்டவர்களின் வருகையைக் குறிப்பிடமுடியும். அவர்கள் சமாதானச் சூழலைப் பயன்படுத்தி, தமது உறவுகளைக்காண வந்துசெல்கிறார்கள்.

அவர்களுடைய பண்பாடு, அவர்களுடைய காலாசாரங்கள், உடையமைப்புக்கள் வெளிநாட்டிற்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், குடாநாட்டிற்குப் பொருத்தமானதல்ல. அவர்களுடைய அந்தக் கலாசாரத்தை எமது நாட்டவர்களும் பார்த்து, பின்பற்றுவதால் - அது குற்றங்கள் புரிவதற்கான தூண்டுதலாக அமைகின்றது.

3. யுத்தத்தினாலே எமது குடாநாடு இன்று மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. அதாவது, யுத்தத்தின் சின்னங்களாக இனறு பாழடைந்த வீடுகளும், கட்டடங்களும் எஞ்சியுள்ளன. அந்த இடங்கள்தான் இன்று காதலர்கள் சந்திக்கும் இடமாகவும், பாலியல் வல்லுறவுகள் நடைபெறும் இடங்களாகவும் இருக்கின்றன. ஆகவே, அத்தகைய வீடுகள் இடிக்கப்படவேண்டும் அல்லது பூரணமாகக் கட்டிமுடிக்கப்படவேண்டும். அது இருக்கும் வரைக்கும் பாலியல் குற்றங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.



வழக்கு விசாரணைகளின்போது, பாதிக்கப்பட்ட பெண்களிடம் - எங்கு இது நடந்தது என விசாரிக்கும்போது, அவர்கள் கூறும் பதில் எதுவாக இருக்கின்றதெனில், எமது வீட்டுக்கு அருகிலுள்ள பாழடைந்த வீட்டில்தான் நடைபெற்றது என்பதாகும். பாழடைந்த வீடுகள் - தனியார் பிரதேசங்களாகும். அவை பரந்தவாய்ப்புக்களை இக்குற்றச் செயல்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

இடப்பெயர்வுகள் - எமது மண்ணிலே தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளன. இதனால், ஒரு சிறிய பிரதேசத்திலே மக்கள் நெருக்கமாக வாழவேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய இடங்களில் - ஆண்கள், பெண்களுக்கென தனித்தனி அறைகளோ, வேறு வசதிகளோ கிடையாது. இதனால், பல தவறுகள் நடைபெற்று விடுகின்றன. பின்னர் குழந்தைகள் பிறக்கும்போது, பெற்ற தாயே வெட்கத்துக்கஞ்சி - கழுத்தை நெரித்துக் கொலை செய்யும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

இவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது எனும் பெரியதொரு வினா எம் முன்னே வீழ்ந்து கிடக்கிறது. சமூகத்திலேவாழும் ஒவ்வொருவரும் இத்தகைய தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமைகளை தமது கைகளிலே எடுக்கவேண்டும். அப்பொழுதுதான் முழுமையாக இந்த வடயங்களை ஒழிக்க முடியும்.

இன்னொரு வகையான குற்றச் செயல்களும், எமது மண்ணிலே நடைபெற்று வருகின்றன. அதாவது, "பாதுகாவலர்கள்" எனக் குறிப்பிடப்படுவோரால் இழைக்கப்படும் குற்றங்கள்.

ஒரு பெண்பிள்ளை தாய், தந்தையினுடைய பாதுகாப்பிலோ, வேறுஒருவரின் பாதுகாப்பிலோ இருக்கலாம். அந்தவேளைகளில்- பாதுகாவலர்களால் அந்தப்பிள்ளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படலாம். பிள்ளை பெற்றதந்தையினாலேயே பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு சம்பவம் இலங்கையிலே 1962 இலே முதலாவதாக நிகழ்ந்தது. அன்றிலிருந்து, தந்தையால் மகள் கற்பழிக்கப்படும் சம்பவங்கள் சங்கிலித் தொடராகத் தொடர்ந்த வண்ணம் உள்ளன. அதிகமான சம்பவங்களிலே, தந்தை மதுபோதைக்கு அடிமையானவராக இருந்திருக்கிறார்.

மட்டக்களப்பிலே நடைபெற்ற ஒரு சம்பவம் - நான்கு வயதுப் பெண் குழந்தையொன்று தந்தையால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டது.

தாய் அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நீதிமன்றுக்குவந்தார். தாய் மரணவீடொன்றுக்குச் சென்றவேளையில் மதுபோதையில்வந்த தந்தை அந்தப் பெண் குழந்தையைப் பாலியல் வல்லுறவுக் குள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளின்போது, அந்தத் தந்தை கேட்டார் "எனது பிள்ளையை நான் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினால் அதில் என்ன குற்றம் இருக்கிறது" என, இது அவருடைய உரிமைப்பிரச்சினையென அவர் வாதாடுகிறார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, ஒரு முக்கியமான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விடயமாகக் கைதடி சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற விடயத்தைக் குறிப்பிட முடியும். குறிப்பிட்ட பிள்ளைகளுடைய வாக்குமூலத்தின் பிரகாரமும், மருத்துவ அறிக்கைகளின் பிரகாரமும், இரண்டு சிறுவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார்கள். எனவும், இரண்டு பெண்பிள்ளைகள் தொடர்ச்சியாகப் பல தடவைகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக சிறுவர் இல்ல நிர்வாகிகளிடம் - அவர்கள் முறைப்பாடு செய்யும்போது, நிர்வாகிகளால் சிறுவர்கள் விரட்டி அடிக்கபட்டிருக்கிறார்கள். இந்தப் பிள்ளைகள் - யாருடைய பிள்ளைகளாக இருந்தால் என்ன? அவர்கள் பெற்றோரை இழந்தவர்கள். சமூகத்தில் மிகவும் கீழ் மட்டத்திலுள்ளவர்கள். அவர்களுக்குத் துணை என்று சொல்வதற்கு யாருமே இலலை.

இந்தச் சம்பவத்திலே பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ள ஒரு சிறுமியினுடைய தாய் - மண்ணெண்ணையால் தன்னைத் தீ மூட்டித் தற்கொலை செய்துவிட்டார். தந்தையார் மிகவும் மோசமான ஒரு குடிகாரன்.

இவ்வாறு ஆதரவற்ற பல பிள்ளைகள் தான், இந்தச் சிறுவர் இல்லத்திலே சரண் புகுந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார். எனவே, இத்தகைய பிள்ளைகளுக்கு, இவ்வாறான ஒரு கொடுமை இழைக்கப்பட்டால், அவர்கள் யாரிடம்சென்று முறையிடமுடியும்.

எனவே, நலிந்துபோயுள்ள ஒரு சமூகத்தினுடைய உரிமைகள் - நசுக்கப்படும்போது, அந்தச் சமூகத்தைக் காக்கவேண்டிய பாரியபொறுப்பு நீதிமன்றங்களுக்கும், அரசுக்கும்தான் இருக்கின்றது.

எனவே, நீதிமன்றம் இந்தப் பிள்ளைகளுக்கு - உயர்பாதுகாவலர்களாக இருந்து, அவர்களைக் காப்பாற்றவேண்டும். குற்றம் இழைத்தவர்கள் நிச்சியமாகத் தண்டிக்கப்பட வேண்டும். (தொடரும்...)

தொகுப்பு ~ இ.சர்வேஸ்



# சித்தமருத்துவத் தகவல்கள்

## முருங்கையின் மருத்துவப் பயன்கள்

நம்நாட்டில் பெரும்பாலான வீடுகளில் முருங்கைமரம் இல்லாமல் இருக்காது. இதன் இலையைப் பலர் சுவைக்காகவே விரும்புகிறார்கள். இதன் காயில் எத்தனையோ விதமான கறிவகைகள் செய்து சுவையாகவும் சாப்பிடுகிறார்கள். முருங்கை மரத்திலுள்ள இலை, பூ, காய், வித்து, பிசின், பட்டை இவற்றின் மருத்துவக் குணங்களை அறிந்தால் எம்மவர்கள் ஆச்சரியப்படுவதுடன், பலநன்மைகளையும் பெறுவர் என்பதைக் கருத்தில்கொண்டு இதை எமது வாசகர்களுக்கு வெளிப்படுத்துகிறோம்.

முருங்கைக் கீரையை வாரம் ஒருமுறையாவது உணவில் சேர்த்துக்கொண்டுவந்தால், உடற்சூடு தணியும். மலக்கட்டு உடையவர்களுக்கு மலம் இளகச்செய்யும். வயிற்றுப் புண்ணை ஆற்றும். இன்றைக்கு யாரைப் பார்த்தாலும், எனக்கு அல்சர், நான் உறைப்பே தின்பதில்லை என்கிறார்கள். அவர்கள் இந்தக் கீரையைப் பயன்படுத்தினாலேபோதும், இந்த நோயிலிருந்து விடுதலை கிடைப்பது நிச்சயம் எனலாம்.

அடுத்து - இன்று அநேகர் கதைக்கும்போது, வாய்நாற்றம் வீசுவதை உணர்வீர்கள். இதற்குக் காரணம் குடலிலே சமிபாடடைந்த உணவின் வாய்வு மேலோட்டமே ஆகும். இது இளைய தலைமுறையிலிருந்து, முதியோர்வரை காணப்படுகின்ற ஒன்று. இந்தக் கீரையை நெய்யிலே வதக்கிச் சாப்பிட்டுவந்தால், ஆறுமாதங்களில் இந்தநோய் மாறுவது நிச்சயம்.

அடுத்து சிலருக்கு எப்போதும் ஒரு மூக்கடைப்புக்குணம் இருக்கிறது. இதுவும் ஒரு வாய்வு சம்பந்தமான பிரச்சினையே. இவர்கள் முருங்கையிலையைச் சாதாரணமாக வறுத்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டாலேபோதும். காலப்போக்கில் மூக்கடைப்பு நீங்கிவிடும்.

நீரிழிவு நோயுள்ளவர்கள் - வாரத்தில் மூன்றுமுறை முருங்கைக்கீரையை உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது. இதுமட்டுமன்றி முருங்கையிலை கண்ணெரிச்சலைத் தணிக்கும். கண்ணுக்குத் தெரியாது காற்றோடு கலந்துவரும் கிருமிகளைச் சுவாசித்தால், நுண்கிருமிகள் நாசிவழியாகச்சென்று மூச்சடைத்தல், மயக்கம்வருதல், தலைகனத்தல் போன்றவற்றை உண்டாக்கும். முருங்கைக் கீரையை வாரம் ஒருமுறை உணவாகச் சாப்பிட்டு வந்தால் இவை குறைந்துவிடும்.

சிலருக்கு சிறுநீர் போகும்போது எரிச்சல் ஏற்படுகிறது. இதற்கு ஒரு தேக்கரண்டி இலைச்சாற்றுடன் சீனியும் கலந்து, காலையில் தினமும் அருந்திவர, மூன்று வாரங்களில் குணம் காணலாம்.

நீரிழிவு நோய்க்கு - முருங்கைக்கீரை இருமடங்கும், எள்ளுப்புண்ணாக்கு ஒரு மடங்கும் சேர்த்து, கீரையைப் பொரித்து உண்டுவந்தால் நீரிழிவு நோய் குணமாகும்.

**முருங்கைக் கீரையின் சாறு தயாரிக்கும் முறை -**

இலையை 100 கிராம் அளவு பிழிந்தெடுத்து, 200 கிராம் நல்லெண்ணையையும் சேர்த்து, அத்துடன் அரைலீற்றர் சுத்தமான பசுப்பாலையும் சேர்த்து தைலப்பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு, ஒருஅவுண்ஸ் வீதம் வாரம் இரண்டுமுறை, தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்துவந்தால், சிரசு சம்பந்தமான பிணிகள் விலகும். கண்ணிலுள்ள எரிச்சலையும் போக்கும். கண்நோய்களைக் குணமாக்கும்.

கண்சிவப்பு, கண்ணறுகல், கண்வீக்கம், கண்ணிமை தடித்தல், கண்ணில் நீர்சொரிதல் ஆகிய கண் சம்பந்தமான நோய்களுக்கு - ஒரு பிடியளவு கீரையைச் சுத்தமாக்கி எடுத்துக்கொள்ளவும், ஒரு தேக்கரண்டி சிற்றாமணக்கு எண்ணையை அதனுடன் இட்டு வதக்கி, இளஞ்சூட்டுடன் கண்மீது வைத்துக்கட்ட மேற்கண்ட நோய்கள் குணமடையும். நோய் விலகும்வரையில் இப்படிச் செய்தல்வேண்டும். (தொடரும்....)

தொகுப்பு - கே.ரட்ணராஜா

# தாய்ப்பால் முதல் முதலுதவி வரை

குழந்தைக்குப் பசியில்லாமல் போகிறது, வழக்கமான சுறுசுறுப்புக்குறைந்து, முகம் வெளிறிப்போய் குழந்தை சோர்ந்துபோய் இருக்கிறது என்றால், அடிக்கடி கொஞ்சம் தணணீர்த் தன்மையாக மலம் கழிக்கிறது அத்துடன்- வாந்தி, அல்லது காய்ச்சல், இவற்றில் சில அறிகுறிகள் இருந்தாலோ குழந்தைக்கு உடல் நலமில்லை என்றுதான் பொருள்.




பொதுவாகக் காலை வேளையைவிட மாலை வேளையில் குழந்தையின் உடல் வெப்பம் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். பகல் வேளையைவிட இரண்டு டிகிரி வெப்பம் அதிகமாக இருந்தால், அதற்காக கவலைப்படவேண்டாம். ஆனால், நூறு டிகிரியைத் தாண்டினால் அது கவனிக்கப்பட வேண்டிய கட்டமாகும்.

காய்ச்சல் மட்டுமல்லாதுகூடவே குழந்தைக்கு உடலிலும் நடுங்கினால் உடனே வைத்தியரிடம் அழைத்துச்செல்வதுதான் நல்லது. ஏனென்றால் இது ஒருவேளை வலிப்பு நோயில் கொணடுபோய் விடலாம். அதற்காகக் குழந்தையின் உடலின் காய்ச்சலும், நடுக்கமும் என்று பயந்து நடுங்கவேண்டாம். திடீரென வலிப்பு ஏற்பட்டு விட்டது என்று வைத்துக்கொள்வோம் என்ன செய்வது? என்று தடுமாறவேண்டாம் குழந்தையைப் பக்கவாட்டில் படுக்கவையுங்கள். நாக்கைக் கடிக்காமல் தடுக்க ஒரு கரண்டியை சுத்தமான துணியில் சுற்றி வாய்க்குள் வைத்து அதன் பின் வைத்தியரிடம் எடுத்துச் செல்லுங்கள். தும்மல் ஏற்பட்டால், பிறந்து சில மாதங்களே ஆன குழநதை தும்மலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தால் தடிமன்தானே என முடிவெடுத்து விடவேண்டாம். தும்மல் என்பது என்ன? மூக்குப்பகுதியில் ஏதோ வேண்டாத பொருள் வந்து சேர்ந்திருக்கிறது என்பதுதான் பொருள். அதை வெளியேற்றும் முயற்சிதான் தும்மல், எனவே, மூக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள உலர்ந்த அடைப்பை மருந்துகள் மூலம் நீக்குதல்வேண்டும். குழந்தைக்கு காதிலிருந்து சீழ் வடிந்தாலோ, மூச்சுவிடும்போது, வசித்திரமான ஒலி உண்டானாலோ வைத்தியரை அனுகுவது நல்லது. குழந்தை கிழே விழுந்தவுடனே மயக்கமடைந்தால் அதுவும் உடனடியாக கவனிக்கவேண்டிய ஒரு விடயமாகும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்*
*தண்பதத்தான் தானே கெடும்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# 'அவசரகால நிலைமை' ஒரு அவசியமற்ற பிரகடனம்...!

ஜனாதிபதி சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரப் பிரயோகத்தின் அடிப்படையிலான அதிரடி நடவடிக்கைகளின் அடுத்த கட்டம் எவ்வாறிருக்கும் என்ற, கேள்வியே இன்று அனைவர் மத்தியிலும் விடைகாணத் துடிக்கும் ஒன்றாக உள்ளது.

மூன்று அமைச்சுக்களின் பொறுப்பினை கைப்பற்றிக் கொண்டதுடன், நாடு முழுவதுக்குமான அவசரகால நிலைமையையும் பிரகடனம் செய்துள்ள ஜனாதிபதி, அமெரிக்காவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட பிரதமர் ரணில் நாடு திரும்புவதற்கு முன்னர் இன்னும் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வாரோ என்ற குழப்பம் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது.

மீண்டும் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யவேண்டிய அளவுக்கு சிறிலங்காவின் அரசுக்கோ, பாதுகாப்புக்கோ என்ன ஆபத்து நேர்ந்துவிட்டது என்பதே தெரியவில்லை.

சமாதான சூழலில் போர்நிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டுவரும் நிலையில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு, சந்தேகத்திற்கிடமானோரை கைது செய்யவும், தடுத்து வைக்கவும் படைத்தரப்பினருக்கு அதீத அதிகாரங்களை பாதுகாப்பு அமைச்சர் என்ற கோதாவில் ஜனாதிபதி வழங்கியிருப்பதானது பல்வேறு சந்தேகங்களை மக்கள் மனதில் எழுப்பிவருகின்றன.

ஒரு நாட்டில் அவசரகால நிலையை பிரகடனம் செய்வதற்கு அந்த நாட்டின் சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் மோசமாக சீர்கெட்டிருக்க வேண்டும் அல்லது ஆபத்துக்குள்ளாகும் நிலை உருவாகியிருக்க வேண்டும்.

ஆனால், சந்திரிகா அதிரடி நடவடிக்கை மூலம் பாதுகாப்பு அமைச்சர் உட்பட மூன்று அமைச்சர்களைப் பதவி நீக்கியதற்கான காரணங்களாக ஜனாதிபதி தரப்பு எதனைக் கூறினாலும், அவை வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட இயல்பற்ற காரணங்களாகவே இருக்கும். உண்மையில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான அதிகாரப் போட்டியின் - பலப்பரீட்சையின் எதிரொலியாகவே இதனைக் கருதவேண்டும்.

உண்மையில் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறதென்றால், அது ரணில் அமெரிக்கா போன சமயத்தில்தான் ஏற்பட்டது என்று கூறமுடியாது. அதற்கு முன்னமே அப்படியானதொரு நிலை இருந்திருப்பின் ரணில் நாட்டில் நின்ற வேளையிலேயே இந்த நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொண்டிருக்க முடியும்.

ஆகவே, ரணில் வெளிநாட்டில் இருந்தவேளையில் மேற்கொள்ளப்பட்ட இந்த அதிரடி நடவடிக்கைக்கு அரசியல் உள்நோக்கங்களும், ராஜதந்திர மூலோபாயங்களும் காரணிகளாக இருக்கவேண்டும் என்றே அரசியல் நோக்கர்கள் கருதுவதிலும் நியாயமிருக்கலாம்.

சரி, இந்த அவசரகாலச் சட்டத்தின் மூலம் சந்திரிகா மீண்டும் நாட்டை ஒரு அச்சம் நிறைந்த, அவலமான சூழ்நிலைக்கு இட்டுச் செல்லப் போகிறார் என்ற பொதுமக்களின் பயமும் - நியாயமானதேயாகும்.

எந்த ஒரு அவசரகால நிலைப் பிரகடனமும் நாட்டின் பாதுகாப்பைக் கருதியே அமுல் செய்யப்படுவதாக, அதனைப் பிரகடனம் செய்வோர் பிரசாரம் செய்தாலும், அவசரகால நிலை அமுலில் இருக்கும் காலங்களில் தொலைந்து போவதென்னவோ மக்களின் பாதுகாப்பும், இயல்பு வாழ்க்கையும் தான்.

அரசியல் பழிவாங்கல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், அனாவசிய கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல்களுக்கும் எப்போதும் அவசரகால நிலைமைகள் அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் அனைவருக்கும் அனுகூலமாக அமைவதே வழக்கம்.

சிறிலங்காவில் இது சர்வ சாதாரணமான விடயமாகும். பெரும்பாலான - அரச அதிகார பீடத்தவர்களின் அனுசரணையுடனான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் யாவும், அவசரகால நிலைமைகளின் கீழேயே அரங்கேறியுள்ளமைக்கு வரலாற்று ஆதாரங்கள் நிறையவே உண்டு.


தாஸிவற்றாச்சி அவர்கள் எழுதிய 'அவசரகால நிலைமை 58' என்ற நூல் இதற்குப் பல உதாரணங்களைத் தரும் ஒன்றாகும்.

ஒவ்வொரு இனக்கலவரக் கொடுமைகளும் அவசரகால நிலைமைகளின் கீழேயே இரத்தவரிகளால் வரலாற்றை எழுதின. பொதுவாக பேரினவாத அரசுகள் தமது அதிகார அடக்குமுறைகளை கட்டவிழ்த்து சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கு அவசரகால நிலைமையையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும், ஊடகச் செய்தித் தணிக்கையையும் கருவிகளாக பயன்படுத்திவந்துள்ளனர் என்பதே உண்மையாகும்.

இரு தசாப்தத்திற்கு அதிகமான காலம், கொடும் யுத்தத்திற்கு முகம்கொடுத்து துயரங்களை எதிர்கொண்ட மக்களின் ஒன்றரை ஆண்டுகால அமைதியை, சமாதானம் குறித்த நம்பிக்கையுடனான இயல்பு வாழ்க்கையை - யார் என்ன சொன்னாலும் - எத்தகைய நியாயத்தைக் கூறினாலும் - இந்த அவசரகால நிலைப் பிரகடனம் சிதைந்துவிட்டது என்பதே *உண்மை.*

இந்த நிலையில் ஜனாதிபதி இந்தளவு அவசரஅவசரமாக, அவசரகால நிலையை பிரகடனம் செய்ய வேண்டியதற்கான உண்மைக் காரணம் அவருக்கு மட்டுமே நியாயமான அரசியல் காரணமாகவே இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுவது சரியாகவே இருக்கும்.

## நாடும் நடப்பும்



சிறிலங்காவில் சமாதானத்தின் நிலை;
சர்வதேசத்தின் அதிர்ச்சி நோக்கு...!

### நீதிமன்றுக்குச் செல்லும் வழியில்

# தப்பியோட முற்பட்டவேளை கைதிகள்மீது துப்பாக்கிப் பிரயோகம்; இருவர் காயம்

(மட்டக்களப்பு)

பதுளைச் சிறைச்சாலையிலிருந்து மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்லும் வழியில், மூன்று கைதிகள் தப்பியோட முயன்றவேளை, மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்துள்ளார்கள்.

நேற்றுக்காலை ஏழு மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், தப்பியோடிய ஒருவர் விடுதலைப்புலி உறுப்பினர் என்று சந்தேகிக்கப்படும் நபரொருவராவார். மற்றவர் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த உறுப்பினர் ஆவார்.

மனிதப்படுகொலைகள் தொடர்பாகச் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டின்பேரில், மொனராகலச்சந்தியில், சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர் ஒருவரே, தப்பியோடிய நபரில் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (01)

# பொ.ஐ.மு.அமைப்பாளர்களுடன் ஜனாதிபதி அவசர சந்திப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்சியமைப்பாளர்களை அவசரமாகச் சந்தித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில், கட்சி அமைப்பாளர்களுக்கு நாட்டு நிலமைகள் தொடர்பாகவும், தற்போது எழுந்துள்ள இந்த நிலையை எவ்வாறு எதிர்நோக்கவேண்டும் என்பதையும - கட்சி அமைப்பாளர்களுக்கும், மாவட்ட தொகுதி அமைப்பாளர்களுக்கும் விளக்கியுளளதாகத் தெரிவிக்கப்டுகிறது.

இதேவேளை, இன்று பிரதமர் நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# நாரந்தனை கொலை வழக்கு யாழ். நீதிமன்றில் விசாரணை

கடந்த பொதுத் தேர்தலின் போது நாரந்தனைப் பகுதியில் வைத்து தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் இருவர் கொலை செய்யப்பட்டும், பலர் காயப்படுத்தப்பட்டதுமான சம்பவத்தின் வழக்கு விசாரணைகள் நேற்று யாழ். நீதிமன்றில் நடைபெற்றன.

இதன்போது ஏழாம் சாட்சியான திருநாவுக்கரசு ரவீந்திரனும் பத்தாம் சாட்சியான நவரத்தினம் தனேஸ்வரனும் சாட்சியம் அளித்தனர். ஏனைய சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் இன்று நடைபெறவுள்ளன.

இன்றுடன் முதற்கட்ட விசாரணைகளை அரச சட்டத்தரணிகள் முடித்துவைக்கவுள்ளனர். அதேவேளை, நேற்றைய விசாரணைகளின்போது இந்த வழக்கின் சந்தேக நபர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மதனராஜா, நெப்போலியன், கருணாமூர்த்தி, ஜீவன் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

எதிரிகளின் சார்பாக சட்டத்தரணி வெற்றிவேல் நேற்று மன்றில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கூட்டமைப்பினர் சார்பாகவும் இரண்டு பேர் நேற்றைய வழக்கு விசாரணைகளில் கலந்துகொண்டனர். (ச)

# நீர்ப்பங்கீடு தொடர்பான வழக்கில் நீர்வழுங்கல் சபைக்குச் சிக்கல்கள்

(கொழும்பு)

நீர்ப் பங்கீடு தொடர்பாக மூன்று மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் விடுதலை முன்னணி, வக்கீல் ஒருவர், சாதாரண பொதுமகன் ஆகியோர் இந்த நீர்ப்பங்கீடு தொடர்பான மனுக்களை - நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பாகத் தேசிய நீர்வழங்கல் சபைக்குப் பல்வேறு சிக்கல்கள் தோன்றியுள்ளன என்றும் கூறப்படுகிறது. தனியாருக்கு, நீர் தொடர்பான ஆதிக்கம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும், இதனால் நீர் விநியோகம் பாதிக்கப்படுகின்ற நிலை தோன்றும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

# நாடாளுமன்ற பெரும்பான்மையை பொ.ஐ.முன்னணி ஏற்படுத்தும்!

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றிருப்பதாகவும், இதன்மூலம், புதிய அரசாங்கம் ஒன்றைத் தோற்றுவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்கவின் தலைமையை ஏற்று, புதிய அரசமைக்க, பல ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்துள்ளனர் என்று பொ.ஐ. முன்னணி மேலும் தெரிவித்துள்ளது.

# சிறுவர் இல்லப் பெண்மீது பாலியல் பலாத்காரம்!

(கொழும்பு)

கோட்டையிலுள்ள - சிறுவர் இல்லம் ஒன்றிலுள்ள பெண்ணை, பலாத்காரம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சிறுவர் இல்லத்திலுள்ள அதிகாரி உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட 11 பேர் மீதும் கொண்டு வரப்பட்ட பிணையினை, கொழும்பு நீதிமன்றம் நிராகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# அரச ஊழியர்களின் சம்பள உயர்வு ஜனாதிபதியின் அறிவிப்பால் ரத்து!

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், எதிர்வரும் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு -செலவுத்திட்டத்தில், அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வை அறிவிக்கமுடியாது போயுள்ளது என்று, நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்தார்.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் நான்கு இலக்கங்கள் கொண்ட சம்பள உயர்வும்,ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் 1000-1200 ரூபா விசேட கொடுப்பனவை, சம்பளத்துடன் சேர்ப்பது சம்பந்தமாக அறிவிக்கப்பட இருப்பதாக அவர் கூறினார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம், ஓய்வூதியர்களுக்கு- ஓய்வூதிய உயர்வும், ஊழியர் சேமலாப நிதிக்குள் உள்வாங்கும் ஓய்வூதியர்களுக்கு - வரிச் சலுகையும் அறிவிக்கப்பட இருந்ததாகக் கூறினார். கடந்த 5 ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களின் சந்திப்பின்போது அவர் இவ்வாறு கூறினார்.

பால்மா, மருந்து, எண்ணெய் வகைகள் மீது விதிக்கப்படும் வரிகள் விலக்களிப்பதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# என்னதான் நடந்தாலும் எல்லாம் எமக்கு சாதகமே!

**கடந்த சில தினங்களாக ஜனாதிபதி சந்திரிகாவால் எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கைகள் பற்றி, மக்கள் கருத்தை அறிவதற்காக வீதியில் இறங்கினோம். பலதரப்பட்ட மக்களுடனும் இந்த விடயங்கள் தொடர்பாக உரையாடியபோது, அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது.**

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
**வரலாற்றுத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம்.**



இந்த ஆட்சி மாற்றத்தைச் சாதகமாகவும், பாதகமாகவும் பார்க்கலாம். சாதகநிலை என்னவென்று பார்த்தால், இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்கால திட்டவரைபைச் சமர்ப்பித்து, மூன்று நாட்களின் பின் இது நடைபெற்றுள்ளது. அந்த வரைபிலே ஒரு பூரணமான சுயாட்சி அமைப்பிற்குரிய விடயங்கள் அடக்கப்பட்டுள்ளன. அந்த நகல் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதற்கும் நியாயப்பாடொன்றுள்ளது.

தமிழ் மக்களுடைய போராட்டத்திற்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் இடையிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள், ஆட்சிக்கு மாறிமாறி வந்த அரசுகள் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தாமை எனப் பல விடயங்களின் பின்னணியிலேதான், ஆயுதப்போராட்டம் முனைப்புப்பெற்றது. இந்த ஆயுதப்போராட்டத்தின் பயனாகவே தமிழ்மக்களுடைய பல இன்னல்கள் தீர்ந்தன. இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால், அதில் விடுதலைப் புலிகளுடைய பங்கு முக்கியமானதாக இருக்கவேண்டும் என்றநிலையும் உருவானது. இந்த விடயம் நியாயமானதாகும்.

பிராந்தியரீதியிலே அதிகாரப் பகிர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமென முதலில் கூறிய கட்சி - சிறீலங்கா சுதந்திரக்கட்சி. பண்டா-செல்வா ஒப்பந்தம் தொடக்கம் இன்றுவரை, அந்தக் கொள்கையாகவே இருக்கிறது. இருந்தாலும், இடையில் அரசியலுக்காக அந்த நிலைப்பாட்டை மாற்றி அமைத்துள்ளது. 1995 ஆம் ஆண்டு இலங்கை நாடானது 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்ற வரைபை சமர்ப்பித்த பெருமையும் சந்திரிகாவையே சாரும்.

இன்றைய அரசில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை. இதனால், அரசியல் யாப்பின் அடிப்படையில் இனப்பிரச்சினைத் தீர்வை முன்னெடுத்துச் செல்வது கடினமாக உள்ளது. எனவே, இத்தகைய சூழலில் அரசும், எதிர்க்கட்சியும் இணைந்தே இந்தத் தீர்வுத் திட்டத்தை முன்னெடுக்கவேண்டும். இப்படியான சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி தற்போது எடுத்துள்ள இந்த நிலைப்பாட்டை சாதகமாகப் பயன்படுத்தி, நல்லதொரு கருத்தொற்றுமைக்கு வந்தால், அது வரவேற்கத்தக்கது.

இடைக்கால நிர்வாக வரைபு பற்றி புலிகளே சொல்கிறார்கள். இது இறுதியான வடிவம் அல்ல. பேச்சுவார்த்தையின்போது, சில மாற்றங்களுக்கும் இடமுண்டு. சுமுகமானமுறையிலே பேசி, அனைத்துச் சமூகங்களும் சந்தோசமாக வாழலாம். இது இறுதிச் சந்தர்ப்பம். கைவிட்டால் வருந்த வேண்டியேற்படும்.

இன்றைய தேவை -இயல்புநிலை, மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம். இந்த மூன்றையும் தரக்கூடிய ஒரு காத்திரமான நிர்வாகக் கட்டமைப்பு இன்று சிரான் தோல்வி கண்டுவிட்டது. இது அதிகாரத்தை மீறி உருவாக்கப்பட்ட அமைப்பாகக் கருதப்படுகிறது. இந்த விடயங்களை நாம் பேசித்தீர்க்க வேண்டும். இதன் மூலமே இறுதியான தீர்வை நோக்கி நகர முடியும்.

இன்று மூன்று முக்கிய அமைச்சர்களை ஜனாதிபதி தன்வசம் எடுத்துள்ளார். இதன் மூலம் பேச்சுவார்த்தையைப் பக்குவமாக நகர்த்த முடியும் என அவர் யோசிக்கலாம். ஆனால், பாதுகாப்பைத் தனது பொறுப்பில் எடுத்ததும் இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஒரு கேள்விக்குள்ளாக்குவதாக உள்ளது.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இடைக்கால நிர்வாக வரைபு -அரசிடம் கையளிக்கப்பட்டு, மூன்று நாட்களில் இது நடைபெற்றுள்ளதால், இடைக்கால நிர்வாக வரைபை குழப்பும் நடவடிக்கையாகவே இது தெரிகிறது. ஏனெனில், ஏற்கனவே நோர்வே ஒருதலைப்பட்சமாகச் செயற்படுவதாக ஒரு குற்றச்சாட்டை ஜனாதிபதி கூறியுள்ளார்.

அந்நிலையில், முக்கிய அமைச்சர்களைத் தனது பொறுப்பில் கொண்டுவந்து, அதன்மூலமாக வேறொருதிட்டத்தை தமிழ் மக்களிடம் திணிக்க முற்படலாம்.

இவ்வாறான நிலையில், தமிழ்த்தரப்பினர் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். முஸ்லிம் மக்களுடனும் சுமுகமான உறவைப் பேணவேண்டும். அடுத்து, மிகவும் முக்கியமான விடயம் - தெற்கிலுள்ள அரசியல் நிலவரங்களை நன்கு அறிந்து, அதற்கு ஏற்றாற்போல் விடுதலைப் புலிகளுடன் இணைந்து காயை நகர்த்தவேண்டும்.

**ஆ.ரகுநாதன்**
**வியாபாரி.**



அண்மைக்காலமாக அரசியல் சூடுபிடித்துள்ளது. இலங்கையின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் தமக்குள்ளே மோதிக்கொள்கின்றன.

இதனால், தென்னிலங்கையில் இரததக்களரி ஏற்படும் வாய்ப்புக்களும் உள்ளது. இது ஒருவகையில் தமிழர்களாகிய எமக்குச் சாதகமான நிலைமையை உருவாக்குகிறது. விடுதலைப் புலிகள் தற்போது மேற்கொண்டுள்ள அரசியல் நகர்வு மிகவும் சரியானது. அந்த நகர்வு வியக்கத்தக்கவகையிலுள்ளது. இரு கட்சிகளும் ஒன்றுடன் ஒன்று முரண்படப்போகின்றன. இதனால், அரசு கலைந்துபோகவும் வாய்ப்புண்டு. எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் நாட்டில் முக்கியமான அரசியல் திருப்பங்கள் ஏற்படும். என்னதான், நடந்தாலும் அனைத்தும் தமிழர்களுக்குச் சாதகமாகவே அமையும்.

இன்று விடுதலைப் புலிகள் அரசியல்ரீதியாக, சர்வதேச அரங்கில் மிகப்பெரிய சாதனையைப் படைத்துள்ளார்கள். தலைவரின் அரசியல் நகர்த்தல் வியக்கத்தக்கதாக உள்ளது. சர்வதேச ஆதரவு அதனால் பெருகியுள்ளது. எனவே, நல்லதொருமுடிவு எமக்குக் கிடைக்கும்.

ஜனாதிபதியின் நடவடிக்கையால் சமாதான முயற்சிகளில் தமிழர்கள் ஆர்வமாக உள்ளதாகவும், சிங்கள இனவாத சக்திகளே அவற்றைக் குழப்பி வருவதையும் சர்வதேசமே உணர்ந்து கொள்ளும்.

ஜனாதிபதி இந்த அமைச்சர்களைப் பதவி நீக்கியது - நீண்டகாலமாகத் திட்டமிட்டே செய்துள்ளார். இது அவரது ஆரம்ப நடவடிக்கையாகவே இருக்கிறது. இனி அடுத்த கட்டம் மிகப்பெரிய மாற்றங்கள் நடைபெறலாம். நாடாளுமன்றம் கலைக்கப்படலாம். இதன்மூலம் தென்னிலங்கை அரசியலில் பெரும் கிளர்ச்சிகள் ஏற்படலாம். ரணிலைப் பொறுத்தவரையில் தற்போது அவர் மக்கள் சக்தியையே நம்பியுள்ளார்.

எனவே, மக்களைத் திரட்டிச் சமாதானத்திற்கு ஆதரவாக அவர் ஒரு போராட்டத்தை நடத்தவேண்டும். இதனையும் ஜனாதிபதி அடக்கமுனைவார். தென்பகுதி மக்களுக்கு இதன்மூலமாகப் பல இழப்புக்கள் ஏற்படும். இவையனைத்தும் எமக்குச் சாதகமாகவே இருக்கும்.

எந்தச் சிங்களக் கட்சிகளுமே இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டவைதான். இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில், இரு பெரும் சிங்களக் கட்சிகளும் மோதிக்கொள்வது, வித்தியாசமான ஒரு இனமோதலுக்கு வழிசமைக்கும். அதாவது, சிங்களவர்களிடையே இரு கட்சிகளாகப் பிரிந்து, மோதும்நிலை உருவாகும். இதனால், சிங்களவர் தமது பாதுகாப்புக்காக தமிழர்களிடம் கையேந்த வேண்டிய நிலையும் ஏற்படலாம்

**எஸ்.கிரிஷன்**
**பல்கலைக்கழக மாணவன்.**



இலங்கையின் ஜனாதிபதியைப் பொறுத்தளவில் அவரிடம் நிறைவேற்று அதிகாரமுள்ளது. இந்தநிலையில் பார்த்தால் - பாதுகாப்பு, நிதி, நிர்வாகம் தொடர்பான முழு அதிகாரமும் - ஜனாதிபதியினுடைய கைகளில் இருக்கிறது. சிலவேளைகளில், நாட்டினுடைய நன்மை கருதியும் ஜனாதிபதி இந்த முடிவை எடுத்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது.

கடந்த இருபது வருடகாலமாக இனப்பிரச்சினையானது - வெறுமனே போராட்டத்தின் மூலமாகவே நடைபெற்று வந்தது அனைவருக்கும் தெரியும். ஆனால், தற்பொழுது அரசியல் ரீதியான ஒரு தீர்வை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தற்போது அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலைகளில், அரசியல் பற்றிய ஒரு தெளிவு இருதரப்பினருக்கும் தேவை. தற்பொழுது வடக்கு-கிழக்கு வாழ் மக்களின் தேவைகள், உரிமைகள் குறித்த ஒரு நியாயமான தீர்வை - விடுதலைப் புலிகள் அரசிடம் சமர்ப்பித்துள்ளார்கள்.

இனி அரசு அந்த வரைபை எவ்வாறு கையாளப்போகிறது என்பதில்தான் அடுத்த கட்டம் தங்கியுள்ளது. அரசு சாதகமானமுடிவை எடுக்கும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இப்படியான ஒரு சூழ்நிலையில், மூன்று அமைச்சர்களை - ஜனாதிபதி பதவி நீக்கியமைதான் வியப்பாகவுள்ளது. குறித்த அமைச்சர்களின் பதவிகளைக் குறித்த காலத்திற்கு ரத்து செய்வது அல்லது அதற்கான மாற்றீடுகளை வழங்குவதற்கு அப்பால், ஜனாதிபதி இந்த மூன்று அமைச்சர்களையும் பதவி நீக்கியது தான் கேள்விக்குறியாகவுள்ளது. இது எத்தகைய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதை எம்மால் எதிர்வு கூறமுடியாதுள்ளது.

**தூரி நேறியோ**
**பல்கலைக்கழக மாணவி**



ஜனாதிபதியின் இந்தச் செயலை முதலில் அறிந்தவுடன், நாம் மிகவும் பயந்தோம். ஏனெனில், சமாதான முயற்சிகள் பாதிப்படைந்து விடுமோவென அச்சமுற்றோம். ஆனாலும், பின்னர் வெளியான சில செய்திகளை வைத்து நாம் தெளிவொன்றைப் பெற்றுக்கொண்டோம்.

அதாவது, அநேகமாக இனிமேலும் பிரச்சினை ஏற்படாது. ஜனாதிபதி - ஆரம்பம் தொடக்கமே சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாகவே இருந்து வருகின்றார்.

ஆனால், பிரதமர் ரணில் எடுத்த முயற்சிகளால் இப்பொழுது இனப்பிரச்சனை ஓரளவிற்கு தீரக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகப்படுகிறது.

ஜனாதிபதி எத்தகைய குழப்பத்தை விளைவித்தாலும், சமாதான முயற்சிகள் முன்னகரும் என நம்புகிறோம்.

**இந்திரகுமார்**
**சந்தை வியாபாரி**



விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் திட்டவரைபு அமெரிக்காவால்கூட ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த திட்டத்தைக் கொண்டே எமது பிரச்சினையைத் தீர்க்கலாம் எனச் சர்வதேசம் எண்ணிக்கொள்கிறது. இப்படிப் பார்த்தால் தென்னிலங்கையில் ஏற்படும் சகல மாற்றங்களும் எமக்குச் சாதகமாகவே இருக்கும்.

பிரதமர் ரணில் நாட்டில் இல்லாத சூழ்நிலையில், இந்த மாற்றம் இடம்பெற்றுள்ளது. ஆனாலும், ஜனாதிபதி கூறியுள்ளார் - தான் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயாரென. இப்போது தென்னிலங்கையில் இரண்டு அரசுகள் மாறி மாறி ஆட்சிபுரிவதுபோலவே இருக்கிறது. இதனால், சமாதான முயற்சிகளையும் தன்னுடைய கைகளினால் முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதி சிலவேளைகளில் யோசிக்கலாம்.

ஆனால், முன்னர் ஜனாதிபதியின் கட்சி ஆட்சியில் இருந்தபோது; பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் அவை குழப்பம் அடைந்தன. தற்போது ரணில் -தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வுகாணப் பாடுபடுகிறார். அதனைத் தடுத்து, தான் சாதித்ததாகக் காட்டவே சந்திரிகா முயல்கிறார். இதனால், பல பிரச்சினைகள் தோன்றலாம். எல்லாமே சுயநலத்தை மையமாக வைத்தே எடுக்கப்பட்டு வருகின்றன.

இனியும் இராணுவ அதிகாரத்தைப் பயன்படுத்தி எம்மை அடக்க நினைத்தால், அதனால் சிங்களதேசமே பாரிய பின்னடைவுகளைச் சந்திக்கவேண்டி ஏற்படும். ஏனெனில், உலகநாடுகள் எமது போராட்டத்தை படிப்படியாக அங்கீகரிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உருவாகும். இதனால், எமக்கு ஒரு விமோசனம் ஏற்படும்.

**வே.கதிர்காமநாதன் - சாரதி**



சந்திரிகாவின் நிலைப்பாடு - தமிழர்களை ஏமாற்றுவதாகத்தான் உள்ளது. அநேகமாக தமிழ்மக்கள் - ரணில் மூலமாக ஒரு தீர்வு கிட்டுமென நம்பினார்கள். ஆனால், தற்போது சந்திரிகா - ரணிலுடைய சமாதான முய்ற்சிகளைக் குழப்பி, தான் நல்ல தீர்வை பெற்றுத்தருவேன் என்பதுபோல செயற்படுகிறார். இது வேஷம் போடுவது போலத்தான் எமக்குப்படுகிறது.

ஏதோ ஒரு திட்டத்தை வைத்துக்கொண்டு, அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே இதனை ஜனாதிபதி செய்துள்ளார். இது அனைவருக்கும் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வளவு காலம் எம்மைத் தாழ்த்தி, படுபாதாள நிலைக்குத் தள்ளிவிட்டு, தற்போது தானொரு தீர்வைத் தருவேன் எனும் மாயையை உருவாக்கிக் காட்டுகிறார். அந்த சக்தியும் இவருக்கு யாப்புப்படி உண்டு. எதிர்காலத்தில் ஒரு தேர்தல் வந்தால், நாட்டு மக்களிடம் போய் நிற்பதற்கு, சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியதேவை எதிர்க்கட்சிக்கும் இருக்கிறது. எனவே, ஜனாதிபதியும் அதனையே செய்யவேண்டும்.

மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை தன்வசப்படுத்தி, நான்தான் இலங்கைக்குச் சமாதானத்தைக் கொண்டு வந்தேன் எனக் காட்டவும் ஜனாதிபதி முனையலாம். இனி ஒரு தேர்தலையும் நடத்தும் எண்ணமும் ஜனாதிபதிக்கு இருக்கலாம். சண்டை வருவதையும் ஜனாதிபதி விரும்பவில்லைப்போல் இருக்கிறது.

ஏனெனில், தமிழர்களுக்கு - வெளிநாடுகள் பலவும் உதவிசெய்ய காத்திருக்கின்றன. வெறுப்பாக இருந்த அமெரிக்காகூட, எமது பக்கம் சார்ந்துள்ளது. என்னதான் நடந்தாலும்

**நேரடி ரிப்போர்ட்**

தமிழர்களுக்கு அவை நன்மையாகத்தான் அமையும். அதன்மூலம் ஒரு விடிவுகிட்டும்.

சந்திரிகா இதற்கு முன்னரும் பல திட்டங்களை எடுத்துள்ளார். முல்லைத்தீவு கடலில் வந்த புலிகளின் கப்பலை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு திருப்பி அனுப்பியதாக கூறி, அதன் தலைவரைப் பதவி நீங்கியுள்ளார். சற்று ஆராய்ந்து பார்த்தால், இது தொடர்பாக ஜனாதிபதி கூறுவது கட்டுக்கதைபோலத்தான் தெரிகிறது. ஜனாதிபதி இந்த நடவடிக்கை மூலமாகத் தென்னிலங்கை மக்களிடம் புலிகள் மீது வெறுப்பை உண்டாக்க விளைந்துள்ளார்.

இதைவிட, கொழும்பில் புலிகளுடன் இணைந்து, தன்னைக் கொல்ல ஐக்கிய தேசியக்கட்சி திட்டமிட்டதாகவும் குற்றம் சுமத்துகிறார். இதன்மூலம் தன்னை கொல்லப்போவதாகவும், எனவே தனக்கு மக்கள் ஆதரவு தேவையெனவும் வேண்டுகிறார்.

என்னதான் ஆட்சி மாற்றம் வந்தாலும், புலிகள் சமாதானத்திற்குத் தயாராகவே உள்ளார்கள். எனவே, யார் ஆட்சிக்கு வந்தாலும், எமக்குத் தீர்வு கிடைக்கவேண்டும். அதுதான் எல்லோருடைய விருப்பமும்.

**எஸ். சோமேஸ்வரம்பிள்ளை**
**கல்லூரி அதிபர்.**



அரசியல் யாப்பின்படி - முழு நிறைவேற்று அதிகாரமும் தனக்குள்ளது எனும் எணணத்தில்தான், ஜனாதிபதி இவற்றைச் செய்துகொண்டிருக்கிறார். எனவே, அரசியல் யாப்புச் சட்டமானது, நிறைவேற்று அதிகாரத்தைக் குறைக்குமளவிற்கு மாறிவரவேண்டும்.

இன்று சமாதான முயற்சிகளுக்கு உலக நாடுகள் அனைத்தும் உதவிபுரிந்து வருகின்றன. இதற்கு ஜனாதிபதியும் பின்நிற்காமல் ஆதரவு வழங்கவேண்டும். ஆனால், அவர் இவற்றைக் குழப்பியடிப்பது கவலைதரும் விடயமாகும். புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு 18 மாதங்களாகியும், தமிழர்கள் எந்தப் பலனையும் அடையவில்லை. இதற்கு ஜனாதிபதியும் ஒரு காரணம்.

தற்போது புலிகள் கொடுத்துள்ள இடைக்கால வரைபு - நல்லதொரு திட்டம். உலக நாடுகளும் அதை வரவேற்றுள்ளன. நாட்டினுடைய தலைவி என்றரீதியில், இந்தப் பிரச்சினையைத் தீர்க்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிடுத்து, இவ்வாறான திடீர் நடவடிக்கைகளை எடுப்பது அழகல்ல. இதன் மூலமாகச் சமாதான முன்னகர்வுகள் - பின்னடைவைச் சந்திக்கின்றன.

அதேவேளை, அநேகமான சிங்கள மக்கள் தற்போது அரசியல் விழிப்புணர்ச்சி அடைந்துள்ளார்கள். அவர்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள். எனவே, ஜனாதிபதியின் சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகள் வெற்றி பெறுவது கடினமாகவே இருக்கும்.

**இ. சர்வேஸ்**
**பூ. நகுலன்**

ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1751)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், பூமிகா நடித்த பத்ரி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
XXX
(சி-1752)

சிறு விளம்பரம்
காணி விற்பனைக்கு
பருத்தித்துறை நகரத்துக்கு சமீபமாக விஸ்வகுல வீதியில் வீடுகட்டக் கூடிய நாலு (4) பரப்பு சதுரமான காணி கிணறு, மின்சாரவசதியுடன் விற்பனைக்குண்டு தொடர்பு B.ஜீவானந்தம், காயத்திரி நகைமாளிகை, 259, பிரதானவீதி பருத்தித்துறை. தொ.பே.0602-212780. (சி-1783)

# இடமாற்ற அறிவித்தல்

'வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம், இல.13 சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.' என்னும் முகவரியில் இயங்கி வந்த எமது நிறுவனம் 07.11.03 இன்று முதல் 'இல.63, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.' என்னும் முகவரியின் கீழ் இயங்கவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

எமது புதிய முகவரி:-

**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்**
இல.63 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:- 021-222-5932 (சி-1772)

# அரசாங்க அறிவித்தல்

## கூறுவிலை கோருதல்

மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இப்பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| பொருட்களின் பெயர் | தொகை |
|---|---|
| 1. Toner - HP Laser Jet 1300 | 5 |
| 2. Coputer Table 4`X1.8`X2.5` (Wood) | 10 |
| 3. Coputer Chairs (Rebolving) | 12 |
| 4. Stabilizer Servo type - 100W (Goldsource) | 5 |

2. கூறுவிலைகள்சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கூறுவிலைப் படிவங்களை 2003.11.10 ஆம் திகதி தொடக்கம் 2003.11.18 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. கூறுவிலைகள் சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக ரூபா 5000 த்தை யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டின் பிரதியை கூறுவிலை கோருதல் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

4. பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்பட்டியலை இருபிரதிகளில் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபால் உறையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.11.18 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக சேர்த்தல்வேண்டும் அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அப்பொழுது கூறுவிலை கோரியவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

5 கூறுவிலைகள் உள்ளடக்கிய தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் 'மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பொருட்களின் கூறுவிலைகள்' எனக் குறிப்பிடல் வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறுவிலை கோரியவர் ஏழு நாட்களுக்குள் என்னால் வழங்கப்பட்ட வழங்குக் கட்டளைகளுக்குப் பொருட்களை வழங்கல் வேண்டும்.

7. இவ்விளம்பரத்தில் கூறப்பட்டுள்ள பொருட்களின் மாதிரிகளுக்கும் தரங்களுக்கும் இணங்க இப்பொருட்களை வழங்கக்கூடியவர்கள் மட்டுமே இக் கூறுவிலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். வேறு மாதிரிகளும் தரங்களும் சமர்ப்பிக்கப்படின் அவை ரத்துச்செய்யப்படும் என்பதனை கூறுவிலை சமர்ப்பிப்பவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரசாங்க அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை,
மாவட்டச்செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-1789)

# ஊர்சுற்றி எழுதுவது

நிலையான ஒரு அரசாங்கத்துடன்தான் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தமுடியும். அப்படி நடத்தினால்தான் நல்ல முடிவும் ஏற்படும். அதனை நடைமுறைப்படுத்தமுடியும். இப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் இல்லை ஆதலால், சமாதானப் பேச்சுக்களை நடத்துவதில் அர்த்தமில்லை.

இதனால்தான் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்கவும், இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி வாழ்வதற்கு வழிசெய்யவும் இவர்களுக்கு சர்வதேசமும் வழங்க முன்வந்துள்ள உதவிகள் அவர்களுக்குப் போய்ச்சேரவும். இடைக்கால நிர்வாகக் கட்டமைப் பொன்று தேவையென்று விடுதலைப் புலிகள் கேட்டனர். இதற்காக அரசாங்கம் சமர்ப்பித்த திட்டம் அந்த நோக்கத்தை நிறைவேற்றத் தவறியதால், விடுதலைப் புலிகள் பல நாடுகளுக்குச் சென்று அனுபவசாலிகளான சட்ட நிபுணர்களுடனும் கலந்தாலோசனை செய்து, 'இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை' ஒன்றை நிறுவுவதற்கான ஒரு திட்டவரைபை உருவாக்கி அரசாங்கத்திடம் சமர்பபித்தனர்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இந்தத் திட்டவரைபு - அரசாங்கம் முன் வைத்த திட்டவரைபுக்கு அடிப்படையிலேயே மாற்றங்களைக் கொண்டிருந்தாலும், இருதரப்பும் இதை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கலாம் என்று அரசின் சார்பில் பேசவல்ல அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார். விரைவில் பேச்சுவார்த்தைக்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு, சமாதானத்திற்கு அனுசரணையாளர்களான நோர்வையை கேட்டுக்கொள்ளவும் இருந்தனர்.

சமாதானப் பேச்சுக்கள் தொடங்கினால்தான் டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்குக் கோடிகோடியாக வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட நிதியுதவி கிடைக்கும்.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்குப் போய்விட்டது. மக்களின் வாழ்க்கைச் செலவு எட்டாத உயரத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது. அரசாங்க சேவையிலுள்ளோர் சம்பள உயர்வு கேட்டுப்போராடிக்கொண்டிருக்கிறார்கள். தனியார்துறை ஊழியர்களும் சம்பள உயர்வுக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலும் போர்ச்செலவு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு சமாளித்துவிடலாமென்றுதான் அரசாங்கம் கனவுகண்டுகொண்டிருந்தது.

இதனடிப்படையில்தான் நிதியமைச்சர் தமது வரவுசெலவுத் திட்டத்தை தயாரித்து சில தினங்களுக்குள் அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருந்தார். நாட்டின் பொருளாதாப் பிரச்சினையைவிட, மக்களின் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையைவிட நீயா? நானா? என்பதுவே முக்கியமாய்ப் போய்விட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கா? நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கா அதிகாரம் அதிகம்?

நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களில் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளதா? பாதுகாப்பு அமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறதா? என்ற அதிகாரப் பிரச்சினை எழுந்தது. இதில் பிரதம நீதியரசர் சரியாக நடந்துகொள்ளவில்லை என்று கருதி, பிரதம நீதியரசருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர முடிவுசெய்யப்பட்டது.

இந்தப் பிரேரணையையே நாடாளுமன்றத்தில் கொண்டுவரமுடியாதபடி, நாடாளுமன்ற கூட்டத்தொடரையே ஜனாதிபதி இரண்டு வாரங்களுக்கு இரத்துச்செய்துவிட்டார். இப்பொழுது பாதுகாப்பு விவகாரங்களில் ஜனாதிபதிக்குத்தான் அதிகாரங்கள் இருப்பதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லிவிட்டது. இதற்கிடையில் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பையே ஜனாதிபதி எடுத்துக்கொண்டு விட்டார்.

இந்த அதிகாரப் போட்டியினால் - வரவு செலவுத்திட்டம் அந்தரத்தில் நிற்கிறது. நிதியமைச்சையும் ஜனாதிபதி தனது பொறுப்பில் எடுக்கப்போவதாகப் பரவிய வதந்தியில் உண்மையில்லை என்று, ஜனாதிபதி அலுவலகம் மறுத்திருக்கிறது.

எந்தநேரத்தில் என்ன நடக்குமோ தெரியாது. நிதியமைச்சர் தயாரித்த வரவுசெலவுத் திட்டம் இப்போது எங்கே இருக்கிறதோ?

1992 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக ஆர்.பிரேமதாஸா பதவிவகித்துவந்தார். அவருக்கு எதிராக குற்றச்சாட்டுப் பிரேரணை ஒன்று கொண்டுவருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பின்னர் இருதரப்பும் விட்டுக்கொடுத்து இந்தக் குற்றச்சாட்டுப் பிரேரணை (impeachment) முயற்சி கைவிடப்பட்டது.

சில வாரங்களுக்கு முன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராகவும் இந்தக் குற்றச்சாட்டுப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் என்று ஆளும்கட்சியைச் சேர்ந்த சிலர் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்கள்.

இதன் விளைவுதான் இப்போது மூன்று அமைச்சர்களை ஜனாதிபதி அதிரடியாகப் பதவிநீக்கம் செய்யக் காரணம் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

விரைவில் ஆட்சிமாற்றம் வருமென்றும், அது ஜனநாயகமுறையிலேயே நடைபெறும் என்றும் சந்திரிகா அம்மையார் சில மாதங்களுக்கு முன் கூறியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் கூட ஆட்சிமாற்றம் பற்றிக் கூறியிருந்தார்.

அநுரா பண்டாரநாயக்க கொஞ்சக் காலமாகவே, ஜே.வி.பி மூலம் ஆட்சிமாறும் எனக் கனவுகண்டு வருகிறார்.

ஆனால், 127 எம்.பிக்கள் ரணில் ஆட்சியில் நம்பிக்கை தெரிவித்து கையொப்பமிட்டுக் கொடுத்திருக்கின்றனர்.

பேரப்பேச்சுக்களில் ஏதோ சறுக்கிவிட்டது போலிருக்கிறது. இன்றுள்ள நிலையில் பொதுத் தேர்தலுக்குப் போனாலும் அம்மையாருக்கு அதிர்ஷ்டம் எட்டிப்பார்க்காது போலிருக்கே என்றார் அன்பர்.

ரணில் வந்ததும் என்ன நடக்கிறது என்று கவனிப்போம் என்கிறார் எதிர் வீட்டுக்காரர்.

யாழ்.குடாநாட்டு வியாபாரிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அன்பான அறிவித்தல்
ஜோ.எகட்டனின் செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டமஸ், ஸ்தாபனத்தார்.
இலங்கையின் முன்னணி நிறுவனமான மகாராஜாவின்
1. M.B.C NET Work (privte LTD)
2. M.T.V CHANNEL (P.V.T. LTD)
விளம்பர ஸ்தாபனத்தாருடன், யாழ் மாவட்ட பிரதம முகவராக 5-11-03 முதல் இணைகின்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறார்கள்.
சக்தி F.M சக்தி T.V YES F.M
M.T.V CLISSIC F.M. சிரச T.V எவற்றிலும் உங்கள் விளம்பரங்களை இணைத்துக் கொள்ளலாம்.
உங்கள் விளம்பரத் தேவைகள் எதுவானாலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள். யாழ். வியாபாரிகளுக்கு மட்டும் செனித் வழங்கும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை சக்தி F.M இல் விளம்பரம் செய்பவர்களுக்கு 20 வீத அதிரடிக் கழிவு இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.
மேலதிக விபரங்களுக்கு :-
அதிரடித் தொலைபேசி - 077-7032188,
உள்ளகத் தொடர்புகளுக்கு - 222-7227, 0712-399166
ஜோ.எகட்டன்
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டமஸ்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(சி-1784)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசியல் நெருக்கடிகள் உள்ளபோதும் சமாதான முயற்சி முன்னெடுக்கப்படும்!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

நாட்டில் அரசியல் நெருக்கடி நிலவுகின்றபோதிலும், சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால பரிந்துரை தொடர்பில் ஆரம்பகட்டக் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இந்த கலந்துரையாடலை ஏற்பாடுசெய்வதற்காக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் மற்றும் விசேடதூதுவர் எரிக் சொல்கெய்ம் ஆகியோர் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளனர்.

அத்துடன் - இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உட்பட பலநாடுகள் சமாதான முயற்சிக்கு தமது ஆதரவைத்தெரிவித்துள்ளன. நாட்டில் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலநிலை முன் யோசனையின்றி எடுக்கப்பட்ட ஒன்றாகும் எனத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், இதன் காரணமாக தற்போது சுமார் இரண்டாயிரம் உல்லாசப்பிரயாணிகள் இலங்கைக்கான தமது விஜயங்களை இரத்துச் செய்திருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் தற்போது நாட்டில் வன்முறையோ, பதற்றமோ இல்லாதநிலையில் - அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதனை அவர் கண்டித்தார்.

இதேவேளை, அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் தலைமையிலான குழுவினர் - அந்த நாட்டுடன் திறந்த வர்த்தக ஒப்பந்தத்தை செய்துகொள்ளாமைக்கு, இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் முறுகல்நிலைமையே காரணம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த இரண்டு நாட்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை காரணமாக, பங்குச்சந்தையில் மாத்திரம் 73ஆயிரம் மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

## நாற்சந்தி

அவசரகால நிலைமை பிரகடனம் வெளியானது தான் தாமதம் அனைவர் முகத்திலும் ஓர் பதற்றம், செயலில் படபடப்பு அவசர அவசரமாக செயற்படும் ஒரு தோற்றம்.

'ஒருவரிடம் எங்கே அவசரமாகப் போகிறீர்கள்' என்றேன். 'வீட்டுக்கு.... மனிசி பிள்ளைகள் யோசிப்பினம்.... அவசரகால நிலைமைச் சட்டமெல்லே போட்டிருக்கினம்....' என்றார் அவசரமாக விரைந்தபடியே....

'பேசாமை வன்னியிலை இருந்திருக்கலாம்... எனக்கு வேணும் யாழ்ப்பாணத்திலை முதல் போட்டு யாவாரம் செய்ய ஆசைப்பட்டதற்கு.... எனக்கு வேணும்....' என்று எல்லாவற்றையும் இழந்ததுபோல் 'தருமி' பாணியில் புலம்பினார் மற்றொருவர்.

'ஏனய்யா... இப்ப என்ன நடந்திட்டுது... ஏன் பதட்டப்படுகிறீர்கள் என்றேன் நான்...'

'இண்டைக்கு அவசரகாலநிலமை எண்டு சொல்லுவினம் நாளைக்கு ஊரடங்குச் சட்டம் என்பினம்.... பிறகு சோதனை, சுற்றிவளைப்பு, கைது எண்டு தொடரும் பிறகு காணாமல் போனோர் பட்டியலிலை எங்களைத் தேடவேண்டிவரும் ....' என்று மேலும் புலம்பினார் அவர்.

'புலம்பவில்லை... அவர் அனுபவம்தான் பேசியது. இந்த நாடு இத்தகைய அனுபவங்களைத்தான் மக்களுக்கு கொடுத்திருக்கிறது. அவசரகால நிலைமையின் கீழ் சண்டை இருக்கலாம் ....சமாதானம் இருக்கலாமோ...! அதை நம்பலாமோ?' என்றார் முன்பின் அறியாத முதியவர் ஒருவர்.

தெருவாசி

# தொடர்ந்தும் அமைச்சர் பதவியில் உள்துறை அமைச்சர் அமரதுங்க

உள்துறை அமைச்சர் பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்டதை, தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் நேற்றுமுன்தினம் உள்துறை அமைச்சுக்குச் சென்று, சில மணித்தியாலங்கள் கடமையில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சின் மேலதிகச் செயலர் உட்பட, உயர் அதிகாரிகளுடன் அவர் பேச்சுக்களில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவரால் விடுக்கப்படும் எந்த உத்தரவையும், தான் ஏற்கப்போவதில்லை என்று, கூறிய உள்துறை அமைச்சர் - நேற்று, மீண்டும் அலுவலகத்திற்கு வருவதாகக் கூறிச் சென்றுள்ளார்.

## வாஜ்பாயிடம் சந்திரிகா உதவி கோரினார்!

தற்போதைய சூழ்நிலையில் இந்திய அரசாங்கம் தமக்கு ஆதரவு அளிக்கவேண்டுமென்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் தொலைபேசி மூலம் நேற்றிரவு வேண்டுகோள் விடுத்தார். சுமார் 20 நிமிடங்கள் நீடித்த இந்தத் தொலைபேசி உரையாடலில் - நாட்டின் தற்போது அரசியல் சூழல் தொடர்பாக இந்தியப் பிரதமருக்கு விளக்கிய சந்திரிகா, பாதுகாப்புச் சூழலைக் கருத்திற் கொண்டே தான் முடிவுகளை மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலைமை தொ[illegible]பாக இந்தியா அதிர்ச்சி தெரிவித்தது குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பிரதமரிடம் கவலை தெரிவித்தார்.

# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு இருபது லட்சம் டொலர் நிதியுதவி!

## கொரிய நாட்டுத் துணைத் தூதுவர் தெரிவிப்பு

கொரிய அரசாங்கம் 20 லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கவுள்ளதாக, அந்த நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் கிம் பியுங்வான் (kim-byung) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினமும், நேற்றும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்த கொரிய நாட்டுக் குழுவினரே யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபரான நா.யோகராஜனைச் சந்தித்து உரையாடிய பின் இந்த உறுதிமொழியை அளித்துள்ளனர்.

யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் ஆயிரம் வரையான மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தொழில் பயிற்சி பெற்று வருகின்றனர். எனினும் அவர்களுக்கான வசதிக் குறைபாடுகள் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன, தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபரும், பிராந்திய பணிப்பாளருமாகிய நா.யோகராஜன்- அவர்களிடம் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்யவும், யாழ் தொழில் நுட்பக்கல்லூரியின் தரத்தை உயர்த்துவதற்குமாக 20 மில்லியன் டொலர்களை வழங்குவதாகவும் முடியுமானால் தமது நாட்டில் புலமைப் பரிசில் அடிப்படையில் சில மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்க முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள் (ப)

## வைத்தியசேவை இன்று நடைபெறாது

கொரிய நாட்டு வைத்தியர்களால் கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில், கடந்த 4 ஆம் திகதி முதல் இன்றுவரை என, அறிவித்து நடத்திய வைத்திய சிகிச்சைகள், இன்று நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்த்த மக்களைவிட கடந்த 4, 5, 6 ஆம் திகதிகளில் 3000ற்கு மேற்பட்டோர் வந்து சிகிச்சையில் பங்குகொண்டு பயன்பெற்றதனால், கொரிய வைத்தியர்கள் கொண்டு வந்த மருந்துகள் நேற்றையதினம் முடிவடைந்ததாலேயே இன்று நடைபெறவிருந்த வைத்திய சேவைகள் நடைபெறமாட்டாது என மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் தெரிவித்தார்.

# அரச ஊழியர்களுக்கு சம்பளம் ஜனவரி முதல் நிறுத்தப்படலாம்!

## பிரதி நிதியமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவைப் பெறுபவர்களுக்கு ஜனவரி மாதம் முதல் கொடுப்பனவுகளை வழங்கமுடியாதநிலை உருவாகலாம் என்று, பிரதிநிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

அடுத்த ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். அவ்வாறு செய்யா விட்டால், அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள், சமுர்த்திநிதி பெ[illegible]வோர் முதலானோரின் கொடுப்பனவுகள் யாவும் நிறுத்தவேண்டிஏற்படும்.

எனினும், இந்த நெருக்கடிநிலை உருவாகாத வகையில் தடுப்பதற்காக - பிரதமர் நாடு திரும்பியதும் வரவு செலவுத் திட்டத்தினை எதிர்வரும் 12 ஆம் திகதி கொண்டுவருவதற்கான முயற்சியை அரசாங்கம் எடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# கொழும்பில் எந்த நேரத்திலும்...

தில் பிரதமருக்கு வரவேற்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருவதைத் தடுப்பதற்காக - கொழும்பு நகரில் எந்தநேரத்திலும் ஜனாதிபதி சந்திரிகா ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கலாம் எனக் கூறப்படுகிறது.

கட்சி ஆதரவாளர்களிடையே மோதல்கள் ஏற்படலாம் என்று காரணம் கூறிக்கொண்டு இந்த நடவடிக்கையை ஜனாதிபதி எடுக்கலாமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இதேவேளை, ஐ.தே.க.கட்சி அரசாங்கத்துக்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகா எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக ஜே.வி.பி.இன்று மாலை கொழும்பில் பாரிய பேரணி ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளால் அரசியல கட்சிகளிடையே மோதல்களுககு வழியேற்படலாம் என்று கருதப்படுவதாலேயே, ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

பெருமளவானோர் பிரதமரை வரவேற்பதைத் தடுப்பதற்கும், கட்சி மோதல்களைத் தடுப்பதற்கும் ஒரே வழி ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதுதான் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### படையினரின்...

அரச அலுவலகங்களில் பாதுகாப்புக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

பதில் பொலிஸ்மா அதிபர் - சகல உயர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ்நிலையங்களுக்கு புலனாய்வுத் தகவல்களை திரட்டுமாறு உத்தரவிட்டுள்ளார். அத்துடன், சகல பொலிஸாரின் விடுமுறைகளும் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக பதில் பொலிஸ்மா அதிபர் அறிவித்துள்ளார்.

### அரசாங்க...

தமது நேரடிக் கண்காணிப்பில் கொண்டுவந்துள்ளதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுயாதீனத் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவுக்குப் பொறுப்பான தரங்க சேனநாயக்க பதவியிலிருந்து விலகியுள்ளார். அவரது பதவிவிலகல் தனிப்பட்ட காரணத்தினால் என்று கூறப்பட்டாலும், ஐ.ரி.என் தகவலின்படி நெருக்குதலாலேயே அவர் பதவி விலகியதாகக் கூறப்படுகிறது.

மேலும், ஐ.ரி.என் இல் இருந்து சந்தன திலகரத்ன, ரவிமல் கசெவெல ஆகியோர் உடனடியாக இடமாற்றப்பட்டுள்ளனர்.

### விடுமுறையில்....

கழுத்து நெரிக்கப்பட்டதனால் மூச்சுத்திணறியே மரணம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை, பிரட்றிக்கோட்டை பிரதான வாசஸ்தலம், கோட்டை இராணுவத்தினரது முகாம் வாசலாக இருப்பதுடன், இந்த இராணுவ முகாமில் இராணுவத்தினர் 24 மணி நேரமும் காவல் கடமையில் ஈடுபட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (10,04)

### தமிழகத்தில்....

ஆண்கள், 3 பெண்கள் அடங்கிய மொத்தம் 17 பேரையும் மன்னார் பொலிஸார் கைதுசெய்து மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவர்களை விசாரித்த மன்னார் நீதிவான் அப்துல்லா - இவர்கள் பேசாலை, மன்னார் மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் எனவே இவர்களை அவரவர் கிராம சேவகர்கள் ஊடாகக் மீளக்குடியமர்த்தும்படி அதிகாரிகளைப் பணித்துள்ளார். (201)

### கொழும்பில்...

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இருந்து அரம்பமாகும் இப்பேரணியானது, கொழும்பு கம்பல் பூங்காவில் நிறைவடையவுள்ளதாகவும், அங்கு பாரிய கண்டனக் கூட்டமொன்று இடம்பெறவிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(01)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி ராஜரட்ணம்(சோதி)

சின்னத்தம்பி ராஜரட்ணம் (சோதி) காலமானார். மாவிட்டபுரம் மடத்தடியை பிறப்பிடமாகவும் மல்லாகம் 7 ஆம் கட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ராஜரட்ணம் காலமானார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், தவரூபன், வ்ிமல், சத்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் மு.முத்துலிங்கம் (சமாதான நீதிவான்) அவர்களின் மருமகனும் ஆவார்.

இவருடைய இறுதிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை இன்று பி.ப 3.00 மணிக்கு 7 ஆம் கட்டை, சேச்லேன் மல்லாகத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தகவல்:
மு.முத்துலிங்கம்,
(சமாதான நீதிவான்),
மாவிட்டபுரம்.

(சி/1786)

யாழ் நகரில்
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!
1.பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2.நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3.டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4.அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்
ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.
Vista Vision
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்,
52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
☎:021-2225187

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.